TNPSC தேர்வுகள்... வெற்றியை நோக்கி...

# வரலாறு படித்தால், வரலாறு படைக்கலாம்



ஸ்ரீவில்லிபுத்தூர் க. மாரிமுத்து

புதிய தொடர்

## 1. அரசு வேலைக்கனவை நனவாக்கி வெற்றி பெறலாம்

விழாக்காலம் போல... இது அரசு வேலைக்காக நடைபெறும் டி.என்.பி.எஸ்.சி. தேர்வுக்காலம்.

ஆம், புத்தாண்டின் தொடக்கத்தில் குரூப்-2 தேர்வு, பிப்ரவரி மாதம் வி.ஏ.ஓ. தேர்வு நடைபெற உள்ளது. குரூப்-4 தேர்வு குறித்த அறிவிப்பும் விரைவில் வர இருக்கிறது. இவ்வாறு ஆயிரக்கணக்கான தமிழக அரசுப்பணிக்கான தேர்வுகள் அணி வகுத்து நிற்கிறது.

வேலை தேடும் இளம் தலைமுறையினரே, உங்களது திறமையை வெளிப்படுத்தி, உங்களை இந்த உலகத்திற்கு யாரென்று தெரிவிக்க, உங்களுக்குள் ஒளிந்திருக்கும் அந்த அரசு அலுவலர் யார் என்று உலகிற்கு அறிவிக்க, தங்கத் தருணம் உங்களைத் தழுவ வருகிறது.

காத்திருக்கும் வாய்ப்புகளை சரியான நேரத்தில் பயன்படுத்துவதில் தான் வாழ்க்கை இருக்கிறது. வாருங்கள், வாய்ப்புகளை பயன்படுத்தி உங்கள் அரசு வேலைக்கனவை நனவாக்கி வெற்றிபெறலாம்.

**இதற்கு முதற்படியாக, வரலாறு படித்தால், வரலாறு படைக்கலாம்.**

டி.என்.பி.எஸ்.சி. தேர்வுகளில் கேட்கக்கூடிய கேள்விகளில் வரலாறு முக்கிய இடத்தைப் பிடிக்கிறது. வரலாறு பகுதியில் இடம்பெறும் அனைத்துக் கேள்விகளுக்கும் பதில் அளிக்கும் வகையில் முக்கிய தகவல்கள் இந்தத்தொடரில் இடம் பெறுகிறது.

நமது வீட்டைப் பற்றி, நமது பெற்றோர் மற்றும் முன்னோர்களைப் பற்றி யாரும் விவரம் கேட்டால் சளைக்காமல், சலிக்காமல் பேசுகிறோம். மனப்பாடம் ஏதும் செய்யாமலேயே அனைத்துப் பெயர்களையும், வருடங்களையும் கூறுகிறோம். இது நமது ரத்தத்திலேயே ஊறியுள்ளது.

அது வீட்டு வரலாறு என்றால்...

இது நாட்டு வரலாறு.

அதே போன்ற மனநிலையுடன், இதனையும் ஈடுபாட்டு உணர்வுடன், உப்புடன் கலந்துவிட்ட தண்ணீராய் கரைந்துபோய் படியுங்கள், வெற்றி நிச்சயம் தேடிவரும்.

**வரலாறு**

1. முதல் உயிரினம் தோன்றியது: கடலில்
2. பூமி தோன்றியது: 460 கோடி ஆண்டுகளுக்கு முன்பு
3. மனிதன் தோன்றியது: 40 ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்பு
4. வேளாண்மை தோன்றியது: 8 ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்பு
5. நகரங்களின் தோற்றம்: 4,700 ஆண்டுகளுக்கு முன்பு

வரலாற்றினை வரலாற்றுக் காலம், வரலாற்றுக்கு முந்தைய காலம் என இரு கால கட்டங்களாகப் பிரிக்கலாம்.

**வரலாற்றுக் காலம்:–** அக்கால மனிதர்கள் குறித்த எழுத்துப்பூர்வமான ஆதாரங்களான இலக்கியங்கள், வரலாற்றுக் குறிப்புகள், கல்வெட்டுக்கள் செப்புப்பட்டயங்கள் போன்ற ஆதாரங்கள் கொண்ட காலம் வரலாற்றுக் காலம்.

**வரலாற்றுக்கு முந்தைய காலம்:–** எழுத்துப்பூர்வமான ஆதாரங்கள் இல்லாமல் கற்

**மொகஞ்சதாரோ**

◆ மொகஞ்சதாரோ தோண்டியெடுக்கப்பட்ட ஆண்டு 1922.

◆ 'மொகஞ்சதாரோ' என்றால் 'இடுகாட்டு மேடு' என்று பொருள்படும்.

◆ மொகஞ்சதாரோ சிந்து மாகாணத்தில் லர்கானா மாவட்டத்தில் (தற்போது இந்த இடம் பாகிஸ்தானில்) உள்ளது.

**சிறப்பம்சங்கள்:–** சுட்ட செங்கற்களால் வீடுகள், கிணறுகள், தனிக்குளியலறை, சமையலறை, பாதாளக் கழிவுநீர்க் குழாய்கள், பொதுக்குளம், துணி மாற்றும் அறைகள், தானியக்களஞ்சியம் போன்றவை.

**சிந்துவெளிக் கருவிகள் கிடைத்த இடங்கள்:–** சான்குதாரோ, காளிபங்கன், குஜராத்தில் லோத்தல் துறைமுகம்.

**வணங்கிய தெய்வங்கள்:–** பசுபதி என்ற சிவன், பெண் தெய்வம், லிங்கம், மரம், சூலம்.

**ஆரியர் காலம் (வேத காலம்)**

வேத காலத்தினை முன் வேதகாலம் (அ) ரிக் வேதகாலம் (கி.மு.1500–கி.மு.1000) என்றும் பின்வேத காலம் (கி.மு.1000–கி.மு.600) என்றும் பிரிக்கலாம்.

ஆரியர்கள் மத்திய ஆசியாவிலிருந்து கைபர், போலன் கணவாய் வழியாக இந்தியாவிற்குள் சப்தசிந்து என்ற பகுதியில் முதலில் (கி.மு.1500–கி.மு.1000) குடியேறினர்.

ஆரியர்கள் சமுதாய அமைப்பு: குடும்பம் → கிராமம் → விஸ் → ஜனா → ஜனபதா என அமைந்தது.

'ஜனா' என்பது மன்னரையும் (அரசன்), 'மகா ஜனபதம்' என்பது பல சிற்றரசுகள் இணைந்த பெரிய அரசையும் குறிக்கிறது.

**முன் வேத காலத்தில் புகழ்பெற்ற பெண் மணிகள்:–** விஸ்வவாரா, அபலா, கோசா, லோபமுத்ரா.

**பின் வேத காலத்தில் (கி.மு.1000–கி.மு.600) புகழ்பெற்ற பெண்மணிகள்:–** கார்க்கி, மைத்ரேயி.

**முன்வேத கால மக்கள் வணங்கிய தெய்வங்கள்:–** வானம், சூரியன், காற்று, மரம், நெருப்பு, இந்திரன், வருணன், அக்னி, எமன்.

**பின்வேத கால மக்கள் வணங்கிய தெய்வங்கள்:–** பிரம்மன், விஷ்ணு, சிவன் (ருத்ரன்).

**மகதம்**

⊙ வட இந்தியாவில் 16 மகா ஜன பதங்கள் மேலோங்கி இருந்தன. அவை ஒன்றுக்கொன்று தங்களுக்குள் போரிட்டுக்கொண்டன. இறுதியில், மகதம் பிற மகாஜன பதங்களை வென்று பேரரசாக எழுச்சி பெற்றது.

⊙ முதல் பேரரசான மகத (இன்றைய பாட்னாவைச் சுற்றியுள்ள பகுதி) நாட்டின் தலைநகராக முதலில் சிராவஸ்தியும், பின்னர் ராஜகிருகம் என்னும் நகரமும், இறுதியாக பாடலிபுத்திரமும் இருந்தன.

⊙ மகதத்தை ஆண்ட முதல் அரசர் பிம்பிசாரர். இவரது வம்சம் ஆர்யங்க மரபு.

⊙ பிம்பிசாரரின் மகன் அஜாதசத்ரு, தனது தந்தையை சிறையில் அடைத்து, ஆட்சியைக் கைப்பற்றினார்.

கலிங்கப் போரில் ஒரு லட்சம் பேர் மாண்டனர். ஒன்றரை லட்சம் பேர் நாட்டைவிட்டு வெளியேறினர். இதன் பேரழிவுக் காட்சிகளால் இனிப் போரிடுவதில்லை என உறுதி பூண்டார்.

⊙ இந்தியாவில் முதன்முதலில் மக்கள் நல அரசை (Welfare State) உருவாக்கிய சிறப்பு அசோகரையே சேரும்.

⊙ அசோகர் போருக்கான திக் விஜயத்தை வெறுத்து தர்மத்திற்கான தர்ம விஜயத்தை மேற்கொண்டார். புத்த மதத்தைத் தழுவினார், புத்த மதத்தை இந்தியாவிலும், வெளிநாடுகளிலும் பரப்பினார்.

⊙ அசோகர் தனது மகன் மகேந்திரனையும், மகள் சங்கமித்திரையையும் புத்த மதத்தைப் பரப்ப இலங்கைக்கு அனுப்பினார்.

⊙ அசோகர் காலத்தில் மாநில அதிகாரிகளாகவும், ஆளுநர்களாகவும் செயல்பட்டவர்கள் மகாமாத்திரர்கள். மக்களுக்கு உதவுவதற்காக நியமிக்கப்பட்டவர்கள் தர்ம மகாமாத்திரர்கள். எல்லைப் பாதுகாப்பை கண்காணித்தவர்கள் அந்த மகாமாத்திரர்கள்.

⊙ மூன்றாவது புத்தசமய மாநாட்டை அசோகர் பாடலிபுத்திரத்தில் நடத்தினார்.

⊙ மௌரிய வம்சத்தின் கடைசி மன்னர் பிருகத்ரதன். இவர் தனது படைத்தலைவரான புஷ்யமித்ரனால் படுகொலை செய்யப்பட்டார். இதன்பின் மகதம் ஏறக்குறைய ஐநூறு ஆண்டுகாலம் வலுவிழந்து நின்றது.

⊙ மௌரியர்களின் வீழ்ச்சிக்குப்பின் வட இந்தியாவில் நிறுவப்பட்ட வலிமையான பேரரசு குஷானப் பேரரசு.

⊙ யூச்சி என்ற இனக்குழுவின் ஓர் உட்பிரிவினரே குஷானர்.

⊙ குஷான அரசை முதலாம் காட்பீஸஸ் கி.பி. முதலாம் நூற்றாண்டில் நிறுவினார்.

⊙ குஷான மன்னர்களில் சிறந்தவர் கனிஷ்கர்.

⊙ சக ஆண்டு (கி.பி.78) தோன்றியது கனிஷ்கர் காலம்.

⊙ இவர் சீனர்களிடமிருந்து காஷ்கர், யார்க்கண்டு, கோட்டான் போன்ற பகுதிகளைக் கைப்பற்றினார்.

⊙ அசோகருக்குப் பின் கனிஷ்கர், புத்த சமயத்தைத் தீவிரமாகப் பின்பற்றியதால், இவருக்கு 'இரண்டாம் அசோகர்' என்று பெயர்.

⊙ கனிஷ்கர், நான்காம் புத்தசமய மாநாட்டினை காஷ்மீரில் நடத்தினார்.

⊙ கனிஷ்கர் காலத்தில் புத்தசமயம் மகாயானம், ஹீனயானம் என இரு பிரிவுகளாகப் பிரிந்தது. மகாயானத்தில் புத்தர் உருவங்கள் செய்யப்பட்டு, வழிபடப்பட்டார்.

**குப்தர் காலம்**

❍ குப்த வம்சத்தை தோற்றுவித்தவர் ஸ்ரீகுப்தர். தலைநகரம் பாடலிபுத்திரம்.

❍ அடுத்து ஆட்சிக்கு வந்தவர் முதலாம் சந்திரகுப்தர்.

❍ முதலாம் சந்திரகுப்தர் காலத்தில் குப்த சகாப்தம் தோன்றியது.

❍ முதலாம் சந்திரகுப்தர் தனது மனைவி குமாரதேவியின் உருவத்தைக் கொண்டு நாணயம் வெளியிட்டார்.

**வரலாற்றுக்கு முந்தைய காலம்:**– எழுத்துப்பூர்வமான ஆதாரங்கள் இல்லாமல் கற்கள், மரங்கள், எலும்புகள், கற்கருவிகள், மண்டை ஒடுகள் போன்றவை மட்டுமே அக்கால மக்கள் வாழ்ந்ததற்கு ஆதாரமாகக் கிடைத்த காலம் வரலாற்றுக்கு முந்தைய காலம்.

இக்காலத்தைக் கீழ்க்கண்டவாறு வகைப்படுத்தலாம்.

**பழைய கற்காலம்** (கி.மு.10 ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்பு): நெருப்பு கண்டு பிடித்தது.

**புதிய கற்காலம்** (கி.மு.10 ஆயிரம் முதல் கி.மு.4 ஆயிரம் வரை): சக்கரம் கண்டு பிடித்தது.

**செம்புக்கற்காலம்** (கி.மு.3000–கி.மு.1500): சிந்துவெளி நாகரிகக்காலம்

**இரும்புக்காலம்** (கி.மு.1500–கி.மு.600): வேத காலம்)

### இந்திய வரலாறு

இந்திய வரலாற்றை, வட இந்திய வரலாறு தென்னிந்திய வரலாறு என இரு பிரிவுகளாகப் பிரிக்கலாம்.

### வட இந்திய வரலாறு

இதில் முக்கியமானது சிந்துவெளி நாகரிகக்காலம் ஆகும். அதுபற்றி காணலாம்.

### சிந்துவெளி நாகரிகக்காலம்

● சிந்துவெளி நாகரிகம் செம்புக்காலமாகும். ஹரப்பா, மொகஞ்சதாரோ நாகரிகங்களைக் கொண்டது.

ஹரப்பா, மொகஞ்சதாரோ மக்கள் வாழ்ந்த காலம் கி.மு.3250 முதல் கி.மு.2750 வரை (500 ஆண்டுகள்)

### ஹரப்பா

● ஹரப்பா தோண்டியெடுக்கப்பட்ட ஆண்டு 1921. கண்டுபிடித்தவர் தொல் பொருள் நிபுணர் ஜான் மார்ஷல்.

● 'ஹரப்பா' என்றால் 'புதையுண்டவர்களின் நகரம்' எனப்பொருள்படும்.

● ஹரப்பா, ராவி நதிக்கரையில் (தற்போது இந்த இடம் பாகிஸ்தானில்) உள்ளது.

● இந்தியாவின் மிகப்பழமையான நகரம் ஹரப்பா.

தனது தந்தையை சிறையில் அடைத்து, ஆட்சியைக் கைப்பற்றினார்.

⊙ முதல் புத்தசமய மாநாட்டை ராஜகிருகத்தில் நடத்தினார் அஜாதசத்ரு.

⊙ ஆர்யங்க வம்சத்தை வீழ்த்தி, சிசுநாகர் ஆட்சியைப் பிடித்தார்.

⊙ சிசுநாகருக்குப்பின் நந்தவம்சத்தினர் ஆட்சியைப் பிடித்தனர்.

⊙ நந்த வம்சத்தின் முதல் மன்னர் மகாபத்மநந்தர்.

⊙ நந்தர்கள் காலத்தில் மாசிடோனிய மன்னர் அலெக்சாண்டர் இந்தியாவின் மேற்குப்பகுதி வழியாக படையெடுத்து வந்தார்.

⊙ அலெக்சாண்டர் தனது வீரர்களைப்புற்றதாலும், நந்தர்களின் வீரத்தை அறிந்ததாலும் போரிடாமல் திரும்பிச் சென்றார்.

⊙ நந்தர்களில் கடைசி மன்னன் தனநந்தர்.

⊙ தனநந்தருக்கு எதிராகக் கிளர்ச்சி செய்து, போரில் வென்று, மகதப் பேரரசை சந்திரகுப்தர் கைப்பற்றி மௌரிய வம்சத்தை தோற்றுவித்தார் (கி.மு.324–கி.மு.299).

⊙ சந்திர குப்த மௌரியர் செலூயுகஸ் நிகேடாரைத் தோற்கடித்து பல பகுதிகளை தனது பேரரசுடன் இணைத்தார்.

⊙ செலூயுகஸ் அனுப்பிய தூதர் மெகஸ்தனிஸ். இவர் பாடலிபுத்திரத்தில் பல ஆண்டுகள் தங்கி இண்டிகா என்ற நூலை எழுதினார்.

⊙ சந்திரகுப்த மௌரியர் பின்னர் அரியணையைத் துறந்து சமண மதத்தைத் தழுவி சரவண பெலகொலா பகுதிக்குச் சென்று சமணமத நம்பிக்கையின்படி தவமிருந்து உயிர்நீத்தார்.

⊙ சந்திரகுப்த மௌரியருக்குப் பின் அவரது மகன் பிந்துசாரர் 25 ஆண்டுகள் ஆட்சி செய்தார்.

### அசோகர்

⊙ பிந்துசாரருக்குப் பின், அவரது மகன்களில் ஒருவரான அசோகர், மௌரியப் பேரரசர் ஆனார் (கி.மு.273–கி.மு.236).

⊙ அசோகர் தனது அரசிலிருந்து பிரிந்து சென்ற கலிங்கத்தை மீட்கச் செய்த

குமாரதேவியின் உருவத்தைக் கொண்டு நாணயம் வெளியிட்டார்.

❍ முதலாம் சந்திரகுப்தருக்குப்பின் ஆட்சிக்கு வந்தவர் சமுத்திரகுப்தர். சமுத்திரகுப்தர் பல வெற்றிகளைப் பெற்றதால், இந்திய நெப்போலியன் என்றழைக்கப்படுகிறார்.

❍ இவருடன் தொடர்புடையது அலகாபாத் கல் தூண்.

❍ இவரது அமைச்சர் அரிசேனர், சமுத்திரகுப்தரின் பெருமைகளை இக்கல் தூணில் இடம்பெறச் செய்தார்.

❍ சமுத்திரகுப்தர் வீணை வாசிப்பதில் வல்லவர். எனவே, நாணயங்களில் வீணை வாசிப்பது போன்ற படங்களை இடம்பெறச் செய்தார்.

❍ இதனையடுத்து ஆட்சிக்கு வந்தவர் இரண்டாம் சந்திரகுப்தர்.

❍ வரலாற்றில் இரண்டாம் சந்திரகுப்தர், விக்கிரமாதித்தன் என்றழைக்கப்படுகிறார்.

❍ இவர் சாகர்களை வென்றதால் 'சாகாரி' என்றும் அழைக்கப்படுகிறார்.

❍ இவர் உஜ்ஜயினியை இரண்டாவது தலைநகராக ஆக்கினார்.

❍ பாஹியான் இவரது ஆட்சிக்காலத்தில் வருகை தந்தார்.

❍ 'நவரத்தினங்கள்' என்று போற்றப்பட்டவர்கள் இவரது அமைச்சரவையில் இருந்தனர்.

❍ நவரத்தினங்களில் ஒருவரே காளிதாசர்.

❍ ஆர்யபட்டர், வராகமிகிரர், வராகபட்டர், அமரசிம்மர், தன்வந்திரி போன்ற நிபுணத்துவம் மிக்க அறிஞர்கள் குப்தர் காலத்தில் வாழ்ந்தனர்.

❍ குமார குப்தர் நாலந்தா பல்கலைக் கழகத்தைத் தோற்றுவித்தார்.

❍ குப்தர்களின் கடைசி மன்னர் ஸ்கந்த குப்தர். ஹீணர்களின் படையெடுப்பினால் குப்த வம்சம் அழிவுற்றது.

❍ குப்தர்கள் காலம், பொருளாதாரம் உட்பட பல துறைகளிலும் முன்னேற்ற நிலையில் இருந்ததால், இவர்களது காலம் பொற்காலம் என்றழைக்கப்படுகிறது.

(வரலாறு தொடரும்)

TNPSC தேர்வுகள்... ெ

# வரலாறு ப

# வரலாறு பண

ஸ்ரீவில்லிபுத்

தமிழக அரசுப்பணிகளுக்காக டி.என்.பி.எஸ்.சி நடத்தும் தேர்வுகளில் வெற்றி பெற உதவும் வகையில் வெளிவரும் பகுதி இது. இந்த தொடரில் வரலாறு பாடங்கள் குறித்த குறிப்புகள் இடம்பெறுகின்றன. கடந்த வாரம் வரலாற்றின் தொடக்க காலம் குறித்த தகவல்கள் இடம்பெற்றது. இந்த வாரம் இந்தியாவில் அரேபியர்கள் படையெடுப்பு முதல் ஆங்கிலேயர் வருகைக்கு முன்பு உள்ள காலம் வரையிலான வரலாற்று தகவல்கள் இடம்பெறுகின்றன.

## 2. இந்தியாவில் அரேபியர் படையெடுப்புகள்

புதிய தொடர்

பண்டைக்காலம் தொட்டே, அரேபியர்கள் இந்தியாவுடன் வணிகத் தொடர்பு வைத்திருந்தனர். செல்வ வளம் கொழிக்கும் சிந்துப்பகுதியின் (அப்போது இந்தியாவில் இருந்தது) துறை முகங்களை கைப்பற்றும் நோக்கத்தோடு, இந்தியாவின் மீது கி.பி.712–ல் படையெடுத்தனர்.

ஈராக் ஆளுநர் அல்ஹாஜாஜ், கலீபா வாலித் அனுமதியுடன் தனது மருமகன் முகமது பின் காசிமை சிந்து மீது படையெடுக்க அனுப்பினார்.

முகமது பின் காசிம் சிந்துவின் மன்னர் தாகீரை வென்று முல்தான் நகரத்தையும் கைப்பற்றினார். முல்தானை, ‘தங்க நகரம்’ என்றழைத்தார்.

கலீபா வாலித்துக்குப் பின், பதவிக்கு வந்த சுலைமான் கலீபா ஈராக் ஆளுநர் அல்ஹாஜாஜின் எதிரியாவார். எனவே, அல்ஹாஜாஜின் மருமகனான முகமது பின் காசிமை பதவியிலிருந்து நீக்கிவிட்டு, கலீபாவே ஆட்சி செய்தார். சிந்து முல்தான் பகுதி 150 ஆண்டுகளுக்கு மேல், கலீபா ஆட்சியின் ஒரு பகுதியாகவே இருந்தது.

பின்னர் கலீபா ஆட்சி மெல்ல, மெல்ல மறைந்தது.

### துருக்கிய படையெடுப்புகள்

கி.பி.8 மற்றும் கி.பி.9–ம் நூற்றாண்டுகளில், பாக்தாத் கலிபாக்களிடம், துருக்கியர்கள் மிகுந்த செல்வாக்குடன் இருந்தனர். துருக்கியர், அரேபியர்களைவிட தீவிரமான ஆக்கிரமிப்புக் கொள்கை உடையவர்கள். எனவே, அரேபியர் ஆதிக்கத்திலிருந்து சிந்து முல்தான் பகுதிகளையும் கடந்து இந்தியாவில் துருக்கியர்களின் ஆட்சியை ஏற்படுத்தினர்.

**முகமது கஜினி:–** ‘கஜினி’ என்ற பகுதியின் அரசர் சபக்டிஜினுக்குப் பிறகு இஸ்மாயில் அரசரானார். இவரின் சகோதரரான முகமது கஜினி, கி.பி.998–ல் இஸ்மாயிலை பதவியிலிருந்து நீக்கிவிட்டு, அப்பதவியில் அமர்ந்தார்.

கஜினி இந்தியாவில் முதன்முதலாகப் படையெடுத்த ஆண்டு கி.பி.1000. இந்தப் படையெடுப்பில் இவர் சாஹி மரபைச் சேர்ந்த ஜெயபாலரை வென்றார்.

கஜினியின் படையெடுப்புகளில் முக்கியமானது கி.பி.1025–ல் நடந்த சோமநாதபுர படையெடுப்பாகும். இப்பகுதியின் மன்னர் இராஜா பீமதேவன் ஓடிவிட்டதால், கஜினி மிக எளிதாக வென்று விலை உயர்ந்த பொருட்களை அள்ளிச்சென்றார்.

கஜினி ஆதரித்த கல்வியாளர்கள் பிர்தௌசி, அல்பருனி.

கஜினிக்குப் பின் ஆண்ட திறமையற்றவர்களால் கஜினி அரசு வீழ்ந்தது. கோரி மரபு ஆளத்தொடங்கியது.

(இக்கால கட்டத்தில், வட இந்தியாவில், டெல்லி, கனோஜ், வங்காளம், மேவார், பந்தல்கண்ட், ஆஜ்மீரி போன்ற பகுதிகளை ஆட்சி செய்தவர்கள் இராஜபுத்திரர்கள். இவர்கள் 36 பிரிவுகளைக் கொண்டவர்கள். இவர்கள் தங்களுக்குள்ளேயே போரிட்டுக் கொண்டிருந்ததால் தான், துருக்கியர்கள் இந்த அரசியல் சூழ்நிலையைப் பயன்படுத்தி, தங்களது ஆட்சியை இந்தியாவில் அமைத்தனர்).

**முகமது கோரி**

கோரி அரசைத் தொடங்கி வைத்தவர் முகமது கோரி.

முகமது கோரி, சௌகான் வம்சத்தைச் சேர்ந்த பிருதிவிராஜனுடன் கி.பி.1191–ல் நடந்த முதலாம் தரெய்ன் போரில் தோல்வியடைந்தார்.

பின்பு, கி.பி.1192–ல் நடந்த இரண்டாம் தரெய்ன் போரில் பிருதிவிராஜனை முகமது கோரி தோற்கடித்தார்.

கி.பி.1194–ல் நடந்த சந்தவார் போரில், கனோஜ் பகுதியை ஆண்ட இராஜபுத்திர மன்னர் ஜெயச்சந்திரனை, முகமது கோரி வென்றார்.

முகமது கோரியின் தளபதியான முகமது–பின்–பக்தியார் கில்ஜி என்பவர் கி.பி.1202–கி.பி.1203–ம் ஆண்டுகளில் விக்ரமசீலா, நாலந்தா பல்கலைக்கழகங்களை இடித்துத் தள்ளினார்.

முகமது கோரி, தான் வென்ற இந்தியப் பகுதிகளின் ஆளுநராக குத்புதீன் ஐபக்கை நியமித்தார்.

முகமது கோரி தனது நாட்டிற்கு திரும்பிய பின்னர், ஷியா பிரிவைச் சேர்ந்த புரட்சியாளர்களும், கோகர்களும் சேர்ந்து கி.பி.1206–ல் முகமது கோரியை கொலை செய்துவிட்டனர்.

இத்துடன் கோரி வம்சம் முடிவடைந்தது.

விழுந்து இறந்தார்.

**இல்துமிஷ்:–**

குத்புதீனுக்கு அடுத்து, அவரது மருமகனான இல்துமிஷ் ஆட்சிக்கு வந்தார்.

இவர் குத்புதீனின் மகன் ஆரம்ஷா என்பவரைக் கொன்றுவிட்டு ஆட்சியைப் பிடித்தார்.

‘டாங்கா’ என்ற வெள்ளி நாணயமும் ‘ஜிடால்’ என்ற செம்பு நாணயமும் வெளியிட்டார். (டாங்கா, ஜிடால் என்பது அரேபிய மொழியாகும்)

அரேபிய மொழியில் நாணயம் வெளியிட்ட முதல் துருக்கியர் இவரே.

நிலப்பகுதிகளை, இக்தா → ஷிக்தா → கிராமம் எனப் பிரித்தார்.

**இரஷியா பேகம்:–**

இல்துமிஸ்சுக்குப் பின், அவரது மகள் இரஷியா பேகம் ஆட்சிக்கு வந்தார்.

டெல்லி சுல்தானின் முதல் பெண் அரசி இவரே.

இளவயது முதல் போர் பயிற்சி பெற்றவர். வேட்டையாடுவதில் விருப்பம் மிக்கவர்.

கணவர் பெயர் அல்துனியா.

இரஷியா பேகத்தின் தலைமை பிடிக்காததால், பிரபுக்களால் கடத்தப்பட்டு இரஷியா பேகம் கொல்லப்பட்டார்.

**நசுருதின் ஷா:–**

இரஷியா பேகத்திற்குப் பின்னர் நசுருதீன் ஷா ஆட்சிக்கு வந்தார்.

பால்பனின் மகளை திருமணம் செய்தார்.

**பால்பன்:–**

நசுருதின் ஷா இறந்த பின்னர் பால்பன் ஆட்சிக்கு வந்தார்.

மேம்லுக் (அடிமை) வம்சத்தில் சிறந்தவர் பால்பன்.

பைபோஸ் என்ற மன்னரின் கால்களை முத்தமிட்டு வணங்கும் முறையைக் கொண்டுவந்தார்.

‘இந்திய கிளி’ என்ற பெயர் பெற்ற அமிர் குஸ்ரு மற்றும் அமிர் ஹசன் ஆகியோரை ஆதரித்தார்.

பால்பனுக்குப் பின்னர் வாரிசுகளான கைகுபாத், கையுமார் ஆட்சிக்கு வந்தனர்.

இவர்களின் பாதுகாவலராக இருந்த ஜலாலுதின் என்பவர் கைகுபாத் மற்றும் கையுமார் ஆகியோர்களைக் கொன்றுவிட்டு ஆட்சியைப் பிடித்தார்.

இத்துடன் அடிமை வம்சம் முடிவுற்றது.

### கில்ஜி வம்சம்

**ஜலாலுதின்:–**

கில்ஜி வம்சத்தைத் தோற்றுவித்தவர் ஜலாலுதீன்.

ஜலாலுதீன் கில்ஜியைக் கொன்று, அலாவுதீன் கில்ஜி ஆட்சியைப் பிடித்தார்.

**அலாவுதீன் கில்ஜி:–**

கில்ஜி வம்சத்தின் சிறந்த மன்னர்.

அரசுப் படையிலுள்ள குதிரைகளுக்கு அரசு முத்திரையை சூடு போடும் முறையைக் கொண்டுவந்தார்.

அங்காடிகளில் பொருட்களின் விலையை இவரே நிர்ணயித்தார்.

‘மண்டி’ என்ற வார்த்தையை அறிமுகப்படுத்தினார்.

அலாவுதீன் கில்ஜிக்குப்பின் திறமையற்றவர்களால் கில்ஜி வம்சம் அழிந்தது.

### துக்ளக் வம்சம்

**கியாசுதீன் துக்ளக்:–**

அலாவுதீன் கில்ஜியிடம் பஞ்சாப் ஆளுநராக இருந்த காசிம் மாலிக் தன் பெயரை கியாசுதீன் துக்ளக் என மாற்றிக்கொண்டு துக்ளக் வம்சத்தைத் தோற்றுவித்தார்.

இவர் வங்காள வெற்றியைக் கொண்டாட அமைக்கப்பட்ட மேடை சரிந்து இறந்தார்.

**முகமது பின் துக்ளக்:–**

கியாசுதீனுக்குப் பின்னர் இளவரசரான ஜினாகான் தன் பெயரை முகமதுபின் துக்ளக் என மாற்றி ஆட்சிக்கு வந்தார்.

இவரது ஆட்சியின் நடவடிக்கைகளின் நோக்கம் நல்லதாக இருந்தபோதிலும், அந்தச் சமயத்தில் சூழ்நிலைக்கு ஏற்றவாறு இல்லாததால் அனைத்தும் தோல்வியில் முடிந்தன.

தோ–ஆப் பகுதிகளில் உள்ள விவசாயிகளுக்கு அதிக வரி விதித்தார்.

இத்துடன் கோரி வம்சம் முடிவடைந்தது.

முகமது கோரியிடம் ஆளுநராகப் பணியாற்றியகுத்புதீன் ஐபக் தனி வம்சத்தைத் தொடங்கினார்.

இதிலிருந்து டெல்லி சுல்தான்களின் ஆட்சி தொடங்குகிறது.

**டெல்லி சுல்தான்களின் ஆட்சி:–** (கி.பி.1206–கி.பி.1526) (320 ஆண்டுகள்)

| | | | |
|---|---|---|---|
| 1. மேம்லுக் (அடிமை) வம்சம்: | கி.பி.1206 | – | கி.பி.1290 |
| 2. கில்ஜி வம்சம்: | கி.பி.1290 | – | கி.பி.1320 |
| 3. துக்ளக் வம்சம்: | கி.பி.1320 | – | கி.பி.1414 |
| 4. சையது வம்சம்: | கி.பி.1414 | – | கி.பி.1451 |
| 5. லோடி வம்சம்: | கி.பி.1451 | – | கி.பி.1526 |

**மேம்லுக் (அடிமை) வம்சம்**

**குத்புதீன் ஐபக்:–**

அடிமை வம்சத்தைத் தோற்றுவித்தவர்.

குதுப்மினாரைக் கட்டத் தொடங்கியவர்.

லக்பாக்ஷா எனப் பெயர் பெற்றவர்.

ஷாசன் நிசாமி, பக்ரி முதிர் ஆகிய அறிஞர்களை ஆதரித்தவர்.

போலோ (குதிரை) விளையாட்டின் போது குதிரைமீது இருந்து

தோ–ஆப் பகுதிகளில் உள்ள விவசாயிகளுக்கு அதிக வரி விதித்தார்.

தலைநகரை டில்லியிலிருந்து தேவகிரிக்கு மாற்றினார். புதிய தலைநகரத்திற்கு தௌலதாபாத் எனப்பெயரிட்டார்.

கருவூலத்தை நிரப்ப செம்பு நாணயம் அச்சிட்டதில், பொதுமக்கள் தாங்களாகவே அச்சிட்டுக் கொண்டனர்.

3,70,000 படை வீரர்களைத் தேர்ந்தெடுத்தார்.

அதிக பனிக்காலத்தில் போர்புரிய வீரர்களை அனுப்பிவைத்ததால், அதிகமான படைவீரர்களை இழந்தார்.

முரண்பாடுகளின் மொத்த உருவம் என அழைக்கப்படுகிறார்.

**பெரோஷா துக்ளக்:–**

துக்ளக் வம்சத்தின் சிறந்த மன்னர்.

வேலை வாய்ப்பு அமைப்பு, திருமண அமைப்பு, பொது மருத்துவம் போன்றவற்றை உருவாக்கியவர்.

நீர் பாசனத்திற்கு முக்கியத்துவம் தந்தார்.

'தக்காவி' என்ற விவசாயக் கடனை தள்ளுபடி செய்தார்.

**சையது வம்சம்:–**

துக்ளக் வம்சத்தில் மூல்தான் கவர்னராக இருந்த கிசிர்கான் என்பவர் சையது வம்சத்தைத் தோற்றுவித்தார்.

இதற்கு அடுத்து வந்தவர்கள் முபாரக் ஷா, முகமது ஷா மற்றும்

வற்றியை நோக்கி...

# டித்தால், டக்கலாம்



தூர் க. மாரிமுத்து

அலாவுதீன் ஷா.

முகமது ஷா 'முபாரக்பாத்' என்பதைக் கட்டினார்.

முகமது ஷா ஆட்சியின் போது மாளவ வெற்றிக்கு பகலால் லோடி என்பவர் உதவி செய்தார்.

எனவே, இவரை 'கானிகானா' என்று முகமது ஷா அழைத்தார்.

அதன்பின்னர் ஆட்சிசெய்த அலாவுதீன்ஷா திறமையற்றவராக இருந்ததால் பகலால் லோடி ஆட்சியைப் பிடித்தார்.

**லோடி வம்சம்**

லோடி வம்சத்தைத் தோற்றுவித்தவர் பகலால் லோடி.

**சிக்கந்தர் லோடி:–**

லோடி வம்சத்தின் சிறந்த மன்னர் சிக்கந்தர் லோடி.

இவர் ஆக்ரா நகரை உருவாக்கினார்.

**இப்ராஹிம் லோடி:–**

இப்ராஹிம் லோடியிடம் பஞ்சாப் கவர்னராக இருந்த தௌலத்கான் லோடி இவரது நடவடிக்கைகள் பிடிக்காமல் பாபரைப் படையெடுத்து வர தகவல் அனுப்பினார்.

முதலாம் பானிபட் போர் 1526–ல் நடைபெற்று, இப்ராஹிம் லோடி தோல்வியடைய அத்துடன் லோடி வம்சம் முடிவுற்றது.

அத்துடன் டெல்லி சுல்தான்களின் ஆட்சியும் முடிவுற்றது.

**முகலாய வம்சம்**

தோற்றுவித்தவர் பாபர். இவரின் முழுப்பெயர் ஜாகிர் உசேன் பாபர்.

இவரது தந்தை உமர்சேக் மிர்ஷா. தந்தைக்குப்பின், தனது 11 வது வயதில் பர்கானா பகுதியை ஆட்சி செய்தார்.

**பாபர் செய்த போர்கள்:**

1526–ல் இப்ராஹிம் லோடிக்கு எதிராக முதலாம் பானிபட் போர்.

1527–ல் ராணா சங்காக்கு எதிராக கான்வா போர்.

1528–ல் மேதின ராய்க்கு எதிராக சந்தேரி போர்.

1529–ல் முகமது லோடிக்கு எதிராக கோக்ரா போர்.

மேற்கண்ட அனைத்துப் போர்களிலும் பாபர் வெற்றி பெற்றார்.

தனது சுயசரிதையை பாபர் நாமா என்ற பெயரில் (துசுக்கி பாபரி) துருக்கி மொழியில் எழுதினார்.

பாபர் 1530–ல் இறந்தார்.

**ஹுமாயூன்: (1530–1540 மற்றும் 1555–1556)**

பாபருக்குப் பின், பாபரின் மகன் ஹுமாயூன் ஆட்சிக்கு வந்தார்.

'ஹுமாயூன்' என்றால் 'அதிர்ஷ்டசாலி' என்று பொருள்.

1539–ல் சௌசா போர் மற்றும் 1540–ல் கன்னோசி ஆகிய போர்களில் ஷெர்ஷாவிடம் தோல்வியுற்றார்.

பின்னர் தலைமறைவு வாழ்க்கை வாழ்ந்தார். அச்சமயம் அமிதா பானு பேகத்தை திருமணம் செய்தார்.

இவர்களின் மகனாக கி.பி. 1542–ல் அக்பர் பிறந்தார்.

1555–ல் இழந்த பகுதியை (காபூல்) மீட்டு ஆட்சியைப் பிடித்தார். சகோதரன் காம்ரானிடமிருந்து காண்டகார் என்னும் பகுதியை மீட்டார்.

டெல்லி, ஆக்ராவையும் வென்றார். ஹுமாயூன் 1556–ல் இறந்தார்.

**ஷெர்ஷா:–**

இயற்பெயர்: பரீத் (அல்லது) பரீத்கான்.

ஜோன்பூர் ஆளுநரை புலி தாக்குதலில் இருந்து காப்பாற்றினார்.

அதனால் இவர் 'ஷெர்கான்' என்ற பெயரைப் பெற்றார்.

பின்னர் வங்காளம் மற்றும் பீகாருக்கு மன்னரானார்.

தனது பெயரை 'ஷெர்ஷா' என மாற்றிக்கொண்டார்.

சூர் வம்சத்தைத் தோற்றுவித்தார்.

1539–ல் சௌசா போர், 1540–ல் கன்னோசி ஆகிய போர்களில் ஹுமாயூனை வென்றார்.

நாட்டில் உள்ள நிலங்களை முதன்முதலாக அளக்கச் செய்தார்.

நில உரிமையாளர்களுக்கு பட்டா வழங்கினார்.

நிலச்சீர்திருத்தம் காரணமாக அக்பரின் முன்னோடி எனப் பெயர் பெற்றார்.

உலோக நாணயங்களை ஒழித்து தங்கம், வெள்ளி நாணயத்தை வெளியிட்டார்.

நவீன நாணய முறையின் தந்தை என அழைக்கப்படுகிறார்.

ஆட்சிப் பகுதிகளை சர்க்கார் → பர்கானா → கிராமம் எனப் பிரித்தார்.

பந்தல்கண்ட் போரின் போது கலஞ்சார் கோட்டையை முற்றுகையிடும்போது ஏற்பட்ட வெடிவிபத்தில் மரணம் அடைந்தார்.

**அபுல்பாசல்:** அக்பர் நாமா, அயனி அக்பரி ஆகிய நூல்களை எழுதினார்.

**அபுல்பைசி:** இராமாயணம், மகாபாரதம் ஆகியவற்றை பாரசீக மொழியில் மொழி பெயர்த்தார்,

1575–ல் 'இபாதத்கானா' தொழுகைக்கட்டிடத்தைக் கட்டினார்.

இந்தக்கட்டத்தில் அனைத்து மதத்தினரும் கூடி, மதக்கருத்துக்களை கலந்துரையாடினர்.

இதன்மூலம் தவறுபடா ஆணையினை பிரகடனப்படுத்தினார்.

அனைத்து மதங்களிலும் உள்ள சிறந்த கருத்துக்களைத் தொகுத்து, கி.பி.1582–ல் **தீன்–இலாஹி** என்ற மதத்தைத் தோற்றுவித்தார்.

ஷெர்ஷாவைப் பின்பற்றி நிலங்களை நிர்வாகம் செய்தார்.

நிலவரி விளைச்சலில் 1/3 பங்கு வசூலித்தார்.

ஜப்தி முறையை அறிமுகப்படுத்தினார்.

குஜராத் வெற்றி நினைவாக பதேபூர் சிக்ரி, புலந்தர் வாசா நுழைவாயிலைக் கட்டினார்.

பஞ்ச் மஹால், அக்பரி மஹால், ஜோத்பாய் அரண்மனை ஆகியவற்றை சிவப்புக் கற்களால் கட்டினார்.

மன்சப்தாரி முறையைக் கொண்டுவந்தார். (மன்சப் என்றால் தகுதி அல்லது தரம் என்று பொருள்).

அக்பர் 50 ஆண்டுகள் ஆட்சி செய்தார்.

அக்பர் 1605–ல் மரணமடைந்தார்.

**ஜஹாங்கீர்:–**

அக்பர் இறப்பதற்கு முன்பு தனது மகன் சலீமை ஆட்சியில் அமர்த்தினார்.

சலீம் தனது பெயரை ஜஹாங்கீர் என மாற்றிக்கொண்டார்.

ஜஹாங்கீர் என்றால் 'உலகினை வெல்பவர்' எனப் பொருள் படும்.

தன்னை எதிர்த்துக் கிளர்ச்சி செய்த தனது மகன் குஸ்ரூவை சிறையில் அடைத்து பின்னர் கொன்றுவிட்டார்.

நியாயம் கேட்ட 5–ம் சீக்கிய குரு அர்ஜுன தேவையும் கொன்றார்.

நீதி சங்கிலி மணி முறையை (ஷபர்ஜ்) அறிமுகம் செய்தார்.

தனது சுயசரிதையினை துசுக்கி–ஜஹாங்கிரி என்ற பெயரில் எழுதினார்.

இவரது மனைவியின் இயற்பெயர் – மெகருன்னிசா (அரண்மனையின் ஒளி)

பின்னர் இப்பெயரை நூர்ஜஹான் (உலகின் ஒளி) என மாற்றினார்.

ஜஹாங்கீர் ஆட்சி செய்தாலும் உண்மையான அதிகாரம் நூர்ஜஹானிடம் தான் இருந்தது. (1611–1626). இது நூர்ஜஹானின் காலம் என்றழைக்கப்பட்டது.

ஆங்கிலேயர்கள் இந்தியாவில் வணிகம் செய்ய அனுமதி பெற்றது ஜஹாங்கீர் காலத்தில் தான்.

ஜஹாங்கீரிடம் அனுமதிபெற முதன்முதலில் இங்கிலாந்திலிருந்து வில்லியம் ஹாக்கின்ஸ் என்பவர் வந்தார். ஆனால் இவருக்கு அனுமதி மறுக்கப்பட்டது.

பின்னர் அனுமதி பெற்றவர் சர் தாமஸ்ரோ.

1615–ல் சூரத், ஆக்ரா, மசூலிப்பட்டினம் ஆகிய இடங்களில் வணிகத்தளங்களை ஆரம்பித்தனர்.

**ஷாஜஹான்:–**

ஷாஜஹானின் இயற்பெயர் குர்ரம். ஷாஜஹான் என்றால் உலகின் அரசன் எனப்பொருள்படும்.

இவருடைய ஆட்சிக்காலம் 'முகலாயர்களின் பொற்காலம்' என அழைக்கப்படுகிறது.

இவர் கட்டிடக்கலையின் இளவரசன் மற்றும் பொறியாளர் பேரரசர் என அழைக்கப்பட்டார்.

**கட்டிய கட்டிடங்கள்:–** செங்கோட்டை, அதில் உள்ள ரங்மஹால், முத்து மஹால், மோதிமஹால், திவானி ஆம், திவானி காஸ், ஜும்மா மசூதி, மற்றும் முத்து மசூதி போன்றவை.

மாளிகைகள் அனைத்தும் வெள்ளை பளிங்கு கற்களால் கட்டப்பட்டன.

உலகப் புகழ்பெற்ற தாஜ்மஹாலை 20 இலட்சம் ரூபாய் செலவில் 22 ஆண்டுகளில் உருவாக்கினார். இதன் தலைமைச் சிற்பி உஸ்தாத் இஷா.

மயிலாசனம் மற்றும் கோஹினூர் வைரம் போன்றவை இவர் உருவாக்கியவை.

இவரது ஆட்சியின்போது இங்கிலாந்திலிருந்து இந்தியாவிற்கு வந்த பெர்னியர், டிராவர்னியர் மற்றும் மனுஷி என்ற இத்தாலியரும் வரலாற்றுக் குறிப்புகளை பதிவு செய்துள்ளனர்.

மகன் ஔரங்கசீப்–ஆல் 1558–ல் வீட்டுச் சிறையில் அடைக்கப்பட்டு 1666–ல் ஷாஜஹான் மரணம் அடைந்தார்.

**ஔரங்கசீப்:–**

ஔரங்கசீப் முதலில் தக்காண ஆளுநராக இருந்தார்.

தந்தையை சிறையில் அடைத்தும், சகோதரர்களான தாரா சுகோ, ஷாஷீஜா மற்றும் முரத் ஆகியோர்களைக் கொன்றும் ஆட்சிக்கு வந்தார்.

அரியணையில் அமர்ந்து 'ஆலம்கீர்' என்ற சிறப்புப்பட்டத்தினை சூட்டிக் கொண்டார்.

அசோகர் மற்றும் அலாவுதீன் கில்ஜிக்குப் பிறகு அதிக நிலப்பரப்பை ஆண்டவர் இவரே.

ஆட்சிப் பகுதிகளை சர்க்கார் ➔ பர்கானா ➔ கிராமம் எனப் பிரித்தார்.

பந்தல்கண்ட் போரின் போது கலஞ்சார் கோட்டையை முற்றுகை யிடும்போது ஏற்பட்ட வெடிவிபத்தில் மரணம் அடைந்தார்.

**அக்பர்:-**

1542–ல் அக்பர் அமரக் கோட்டையில் பிறந்தார். (பெற்றோர் ஹுமாயூன்–அமீதாபானு பேகம்)

தனது 14–ம் வயதில் கி.பி.1556–ல் ஹீமுடன் 2–ம் பானிபட் போர் புரிந்து அக்பரின் பாதுகாவலரான பைராம்கான் 4 ஆண்டுகள் ஆட்சி செய்தார்.

பின்னர் அக்பரின் சிற்றன்னை மகாம் அனாகா 2 ஆண்டுகள் ஆட்சி செய்தார்.

சிற்றன்னை தனது மகன் ஆதம்கானை ஆட்சியில் அமர்த்த முயற்சி செய்வதை அறிந்த அக்பர் ஆதம்கானைக் கொன்று ஆட் சியில் அமர்ந்தார்.

அக்பர் ஜோத்பூர், பிகானிர், ஜெய்சால்மர் இளவரசிகளை மணந் தார்.

இளவரசி ஜோத்பாய்க்கு பிறந்தவர் – ஜஹாங்கீர்.

இந்துக்களான இராஜா தோடர்மால், இராஜா பகவான்சிங், இராஜா மான்சிங் ஆகியோரை அமைச்சர் ஆக்கினார்.

பீர்பால், இசை மேதை தான்சேன், அபுல்பாசல், அபுல்பைசி ஆகி யோரை அக்பர் ஆதரித்தார்.

அரியணையில் அமர்ந்து 'ஆலம்கீர்' என்ற சிறப்புப்பட்டத் தினை சூட்டிக் கொண்டார்.

அசோகர் மற்றும் அலாவுதீன் கில்ஜிக்குப் பிறகு அதிக நிலப் பரப்பை ஆண்டவர் இவரே.

1699–ல் கல்கத்தாவில் ஆங்கிலேயர் வணிகம் செய்ய அனுமதி தந்தார்.

தக்காண பகுதியில் போர்புரிவதிலேயே 25 ஆண்டுகளைக் கழித்தார்.

ஒன்பதாவது சீக்கிய குருவான தேஜ்பகதூர், ஔரங்கசீப்பால் கொல்லப்பட்டார்.

பத்தாவது சீக்கிய குருவான (தேஜ்பகதூரின் மகன்) குரு கோவிந்தசிங், கல்சா என்ற இராணுவ அமைப்பினை உருவாக்கி னார்.

ஔரங்கசீப் 1707–ல் மரணமடைந்தார்.

**ஔரங்கசீப்பை அடுத்து....**

ஔரங்கசீப்பிற்குப் பிறகு முதலாம் பகதூர் ஷா, இரண்டாம் பகதூர் ஷா மற்றும் முகமது ஷா ஆகியோர் ஆட்சிபுரிந்தனர்.

முகலாய வம்சம் பாபரால் தோற்றுவிக்கப்பட்டு, அக்பரால் சிறப் புற்று, ஔரங்கசீப்பால் முடிவை நோக்கி வந்து நாதிர்ஷா மற்றும் அகமதுஷா அப்தாலி படையெடுப்பின் மூலம் முகலாயப் பேரரசு முற்றிலும் முடிவுக்கு வந்தது.

(வரலாறு தொடரும்)

## TNPSC தேர்வுகள்... வெற்றியை நோக்கி...

# வரலாறு படித்தால், வரலாறு படைக்கலாம்



ஸ்ரீவில்லிபுத்தூர் க. மாரிமுத்து

**தமிழக அரசுப்பணிகளுக்காக டி.என்.பி.எஸ்.சி நடத்தும் தேர்வுகளில் வெற்றபெற உதவும் வகையில் வெளிவரும் பகுதி இது. இந்த தொடரில் வரலாறு பாடங்கள் குறித்த குறிப்புகள் இடம்பெறுகின்றன. கடந்த வாரங்களில் வரலாற்றின் தொடக்க காலம் பற்றி தகவல்கள், இந்தியாவில் அரேபியர்கள் படையெடுப்பு முதல் ஆங்கிலேயர் வருகைக்கு முன்பு உள்ள காலம் வரையிலான வரலாற்று தகவல்கள் இடம்பெற்றன. இந்த வாரம் இந்தியாவுக்கு ஐரோப்பியர்கள் வருகை தொடர்பான தகவல்கள் இடம் பெறுகின்றன.**

## 3. இந்தியாவுக்கு ஐரோப்பியர்கள் வருகை

இந்தியாவுக்கும் ஐரோப்பிய நாடுகளுக்கும் மிகப் பழங்காலந்தொட்டே வணிகத் தொடர்பு இருந்தது. இந்தியப் பொருட்களான பட்டு, கைத்தறி, நறுமணப்பொருட்கள் ஐரோப்பிய நாடுகளுக்கு மூன்று வழித்தடங்களில் ஏற்றுமதியாயின.

இதில் இரு வழித்தடங்கள் கி.பி.8–ஆம் நூற்றாண்டில் அராபியர் படையெடுப்பின் விளைவாக தடைபட்டன.

கி.பி.1453 ஆம் ஆண்டு ஆட்டோமானிய துருக்கியர்கள் கான்ஸ்டான்டிநோபிள் நகரத்தைக் கைப்பற்றியதால் மூன்றாவது வழித்தடமும் தடைபட்டது.

எனவே, இந்தியப் பொருட்கள் கிடைக்காமல் அவதிப்பட்ட ஐரோப்பியர்கள், இந்தியாவுக்கு கடல்வழி காணும் முயற்சியில் ஈடுபட்டனர்.

**போர்த்துக்கீசியர்கள்:–**

கடல்வழி கண்டுபிடிக்கும் முயற்சியில் முதலில் இறங்கியவர்கள் போர்த்துக்கீசியர்கள். போர்த்துக்கீசிய இளவரசர் ஹென்றி கடல் பயணத்தில் ஆர்வம் கொண்டு மாலுமிகளுக்கு பயிற்சி பள்ளி ஒன்றை தொடங்கினார். எனவே இவர் **"மாலுமி ஹென்றி"** எனப் போற்றப்பட்டார்.

கி.பி.1487–ல் போர்ச்சுகல் நாட்டைச் சேர்ந்த பார்த்தலோமியா டயஸ், முதன் முதலில் கடல்பயணம் செய்தார். ஆப்பிரிக்காவின் தென்கோடி முனை அடைந்ததும், புயல் அதிகமாக வீசியதால் மேற்கொண்டு செல்ல இயலவில்லை.

இம்முனைக்கு **"புயல்முனை"** எனப் பெயரிட்டார். இதைக் கடந்தால் புதிய பகுதிகளைக் காணலாம் என நம்பிக்கையை வெளிப்படுத்தினார். எனவே இப்புயல் முனை **"நன்னம்பிக்கை முனை"** என்றழைக்கப்பட்டது.

கி.பி1498–ல் போர்த்துக்கீசிய மாலுமி வாஸ்கோடகாமா நன்னம்பிக்கை முனையைக் கடந்து இந்தியாவின் மேற்கு கடற்கரையில் உள்ள கோழிக்கோடு வந்தடைந்தார். அவரை மன்னர் சாமரின் வரவேற்று உபசரித்தார்.

போர்த்துக்கீசியர்கள் இதனை தொடர்ந்து கள்ளிக்கோட்டை, கொச்சின், மற்றும் கண்ணனூர் ஆகிய இடங்களில் வாணிகத்தலங்களை அமைத்தனர்.

போர்த்துக்கீசியர் வாணிகத்தைக் கவனிக்க வந்த முதல் ஆளுநர் பிரான்சிஸ்கோ–டீ–அல்மெய்டா (கி.பி. 1505–1509). இவரது கொள்கை **"நீலநீர் கொள்கை"** எனப்படும்.

போர்த்துக்கீசிய இரண்டாவது ஆளுநர் அல்போன்ஸோ–டி–அல்புகர்க் இவர் கி.பி.1510–ல் பீஜப்பூர் சுல்தானிடமிருந்து கோவாவைக் கைப்பற்றி தலைநகரமாக்கினார்.

இவருக்குப் பின் வந்தவர்கள் திறமையற்றவர்களாக இருந்ததால் செல்வாக்கைக் கட்டிக்காக்க முடியவில்லை.

**டச்சுக்காரர்கள்:–**

ஹாலந்து நாட்டைச் சேர்ந்த டச்சுக்காரர்கள் கி.பி. 1602–ல் டச்சுக் கிழக்கிந்தியக் கம்பெனியை தோற்றுவித்தனர்.

கி.பி.1610–ல் "புலிகட்" என்றழைக்கப்படும் பழவேற்காட்டில் கோட்டை கட்டி அதை தங்கள் தலைமையிடமாக மாற்றினர்.

டச்சுக்காரர்களுக்கு இந்தியாவில் வணிகம் செய்ய ஆர்வமில்லை. நறுமணத்தீவு என்றழைக்கப்பட்ட இந்தோனேசியாவில் வணிகம் செய்தனர். வணிகப்போட்டியில் ஆங்கிலேயரை "அம்பாய்னா" என்ற தீவில் கொன்றனர். இதன் பெயர் '**அம்பாய்னா படு**

இந்தியாவை விட்டு வெளியேறினர்.

**பிரெஞ்சுக்காரர்கள்:–**

பிரான்ஸ் மன்னர் பதினான்காம் லூயியின் அமைச்சரான "கால்பர்ட்" என்பவரின் முயற்சியால் பிரெஞ்சு கிழக்கிந்திய கம்பெனி கி.பி.1664–ல் தோற்றுவிக்கப்பட்டது.

இவர்கள் கி.பி.1668–ல் சூரத்திலும், கி.பி1669–ல் மசூலிப்பட்டினத்திலும் வணிக மையத்தை ஏற்படுத்தினர்.

கி.பி.1674–ல் தஞ்சாவூர் மன்னரிடமிருந்து சென்னைக்கு தெற்கே ஒரு நிலப்பகுதியைப் பெற்று பாண்டிசேரியை நிறுவி, இதனை தலைமையிடமாக மாற்றினர்.

கி.பி. 1742–ல் டியூப்ளே, பிரெஞ்சு கவர்னராக பொறுப்பேற்றார்.

**இறுதி ஆதிக்கப்போட்டி:–**

இந்தியாவுக்கு ஐரோப்பாவிலிருந்து ஐந்து நாட்டைச் சேர்ந்தவர்கள் வந்தாலும், இறுதியில் ஆங்கிலேயர்களுக்கும், பிரெஞ்சுக்காரர்களுக்கும் தான் ஆதிக்கப் போட்டி நிலவியது. இதன் விளைவாக இவர்களுக்குள் போர்கள் ஏற்பட்டன. அப்போர்கள் தான் கர்நாடகப் போர்கள்.

### கர்நாடகப் போர்கள்

**முதல் கர்நாடகப் போர்:** கி.பி. 1746–1748 (அய்லா சாப்பேல் உடன்படிக்கை)

**இரண்டாம் கர்நாடகப் போர்:** கி.பி. 1748–1754 (பாண்டிச்சேரி உடன்படிக்கை)

**மூன்றாம் கர்நாடகப் போர்:** கி.பி. 1756–1763 (பாரிஸ் உடன்படிக்கை)

இரண்டாம் கர்நாடகப் போரில், இராபர்ட் கிளைவ் பங்கெடுத்து ஆற்காட்டைக் கைப்பற்றியதால், **ஆற்காட்டின் வீரர்** என அழைக்கப்பட்டார்.

### பிளாசிப்போர் (கி.பி.1757)

வங்காள நவாப் சிராஜ் உத்தெளலா கல்கத்தாவில், தன் அனுமதியின்றி கோட்டை கட்டிய ஆங்கிலேய போர்வீரர்கள் 146 பேர்களை சிறிய இருட்டறையில் அடைத்து விட்டார். அடுத்த நாள் இவர்களில் 123 பேர் மூச்சுத் திணறி இறந்துவிட்டனர். இந்நிகழ்வு கல்கத்தா இருட்டறை துயரச் சம்பவம் என்றழைக்கப்படுகிறது.

இதனால் ஏற்பட்ட போர் பிளாசிப்போர் (கி.பி.1757). இராபர்ட் கிளைவின் படைகளால் போர் ஏற்பட்ட சில மணி நேரத்தில் சிராஜ் உத்தெளலா தோற்கடிக்கப்பட்டு கொல்லப்பட்டார்.

### பக்சார் போர் (கி.பி.1764)

பிளாசிப்போரின் தொடர்ச்சியே பக்சார்போர். இப்போரிலும் ஆங்கிலேயர் வெற்றி பெற்றனர்.

இதில் ஏற்பட்ட உடன்படிக்கையின் பெயர் '**அலகாபாத் உடன்படிக்கை**'.

ஆங்கிலேயர் பிளாசிப்போரில் பெற்ற வெற்றி பக்சார் போரில் நிலைநிறுத்தப்பட்டது.

கர்நாடகப்போர்களின் வெற்றி மற்றும் பக்சார் போர்களின் வெற்றி இந்தியாவில் ஆங்கிலேயர்கள் ஆட்சி ஏற்படக் காரணமாக அமைந்தன.

**இராபர்ட் கிளைவ்:–** பக்சார் போருக்கு பின்னர் இராபர்ட் கிளைவ், கி.பி. 1765–ல் வங்காளத்தின் முதல் கவர்னரானார்.

இந்தியாவில் ஆங்கிலேய ஆட்சி அமைக்க அடிகோலினார். இரட்டை ஆட்சி முறையை அமல்படுத்தி

### மைசூர் போர்கள்

**முதல் மைசூர் போர்:** (கி.பி.1767–1769) இராபர்ட் கிளைவ்– ஹைதர் அலி – (மதராஸ் உடன்படிக்கை).

**இரண்டாம் மைசூர் போர்:** (கி.பி.1780–1784) வாரன் ஹேஸ்டிங்ஸ் – ஹைதர் அலி – (மங்களூர் உடன்படிக்கை).

**மூன்றாம் மைசூர் போர்:** (கி.பி.1790–1792) காரன்வாலிஸ் – திப்பு சுல்தான் – (ஸ்ரீரங்கப்பட்டின உடன்படிக்கை).

**நான்காம் மைசூர் போர் (மாளவள்ளிப் போர்):** (கி.பி.1799) வெல்லெஸ்லி – திப்புசுல்தான் – (திப்புசுல்தான் இறப்பு)

**மார்குவிஸ் ஹேஸ்டிங்ஸ் பிரபு (கி.பி.1813–1823):–** கி.பி.1813–ல் பட்டயச் சட்டம் நிறைவேற்றப்பட்டது. இதன்படி ஆங்கில கிழக்கிந்தியக் கம்பெனியின் வியாபார உரிமம் 20 ஆண்டுகளுக்கு நீடிக்கப்பட்டது. மேலும் கிழக்கிந்திய கம்பெனியின் வாணிகம் செய்தவதற்கான தனி உரிமை இரத்து செய்யப்பட்டது. பிற ஆங்கில வியாபாரிகளுக்கும் திறந்து விடப்பட்டது.

**கூர்க்கர்களுடன் போர் (கி.பி.1814–1816):–** இப்போரில் கூர்க்கர்களின் இனத்தலைவரான அமர்சிங்கை மார்குவிஸ் வென்றார்.

**பிண்டாரிகளுடன் போர் (கி.பி.1816–1818):–**

பிண்டாரிகள் மத்திய இந்தியாவில் வாழ்ந்த போராளிக்கூட்டத்தினர். இவர்களின் தலைவர்களான அமீர்கான், வாசில்முகமது கரீம்கான் மற்றும் சேட்டு ஆகியோரை மார்குவிஸ் தோற்கடித்தார்.

மார்குவிஸ் பிரபு காலத்தில் பீஷ்வா பதவி முடிவுக்கு வந்தது.

சென்னை மாகாணத்தில் '**இரத்துவாரி முறை**' அறிமுகப்படுத்தப்பட்டது.

**ஆர்ம்ஹஸ்ட் பிரபு:–** கி.பி.1824–ல் பர்மியர்களுடன் ஆர்ம்ஹஸ்ட் பிரபு போர் செய்து வென்றார். இது முதலாம் பர்மியப்போர் ஆகும். இப்போரில் ஏற்பட்டது '**யாண்டபூ உடன்படிக்கை**' ஆகும்.

**வில்லியம் பெண்டிங் பிரபு:–** கி.பி.1829–ல் சதி ஒழிப்பு சட்டத்தை நிறைவேற்றினார். இதற்கு உதவி செய்தவர் இராஜராம் மோகன்ராய்.

கத்தியவார் மற்றும் இராஜஸ்தானில் பெண் சிசுக் கொலையை ஒழித்தார். ஒரிசா பகுதியில் இருந்த நரபலியினை ஒழித்தார்.

கி.பி.1833–ம் ஆண்டு பட்டயச் சட்டம் கொண்டு வரப்பட்டது. இதன்படி வங்காள கவர்னர் ஜெனரல் இந்தியாவின் கவர்னர் ஜெனரலாக பொறுப்பேற்றார்.

ஆளுநரின் நிர்வாக குழுவில், முதன்முதலாக நியமனம் செய்யயப்பட்ட சட்ட உறுப்பினர் மெக்காலே பிரபு.

மாநில மேல்முறையீட்டு நீதிமன்றங்களை கலைத்து விட்டு, அலகாபாத்தில், சிவில் மற்றும் கிரிமினல் நீதிமன்றங்களை நிறுவினார்.

**டல்ஹௌசி பிரபு:–** இந்திய கவர்னர் ஜெனரல்களில் மிகவும் இளமையானவர்.

'**நவீன இந்தியாவை உருவாக்கியவர்**' என்றும், '**இருப்பு பாதையின் தந்தை**' என்றும் அழைக்கப்படுபவர்.

வாரிசு இழப்புக் கொள்கை மூலம் ஜான்சி, சதாரா, ஜெய்பூர், சம்பல்பூர், உதய்பூர், நாகபுரி ஆகியவற்றை ஆங்கில அரசுடன் இணைத்தார்.

டச்சுக்காரர்களுக்கு இந்தியாவில் வணிகம் செய்ய ஆர்வமில்லை. நறுமணத்தீவு என்றழைக்கப்பட்ட இந்தோனேசியாவில் வணிகம் செய்தனர். வணிகப்போட்டியில் ஆங்கிலேயரை "அம்பாய்னா" என்ற தீவில் கொன்றனர். இதன் பெயர் **'அம்பாய்னா படுகொலை'.**

**ஆங்கிலேயர்கள்:–**

லண்டன் நகர வியாபாரிகள் நூறுபேர் சேர்ந்து ஆங்கிலக் கிழக்கிந்தியக் கம்பெனியை தோற்றுவித்தனர். கி.பி.1600 டிசம்பர் 31–ல் இங்கிலாந்து அரசி முதலாம் எலிசபெத் வியாபாரம் செய்வதற்கான அனுமதி வழங்கினார்.

கி.பி.1608–ல் இங்கிலாந்து அரசர் முதலாம் ஜேம்ஸ் கொடுத்த வியாபாரம் செய்ய அனுமதி கோரிய கடிதத்துடன் ஆங்கில மாலுமியான வில்லியம் ஹாக்கின்ஸ், ஜஹாங்கீரின் அரசவைக்கு வந்தார். வியாபாரம் செய்திட அனுமதி கிடைக்கவில்லை.

அதன் பின்னர், சர் தாமஸ் ரோ என்ற ஆங்கில வியாபாரி, வியாபாரம் செய்வதற்கான அனுமதியினைப் பெற்றார்.

ஆங்கிலேயர்கள் சூரத், ஆக்ரா, பரோச், அகமதாபாத் ஆகிய இடங்களில் வாணிப மையத்தை ஏற்படுத்தினர்.

கி.பி.1639 ஆம் ஆண்டு பிரான்சிஸ்டே என்ற ஆங்கில அதிகாரி, சந்திரகிரி அரசரிடமிருந்து ஒரு நிலப்பகுதியை விலைக்கு வாங்கி, தற்கால சென்னை நகரை நிறுவினார். இதில் கி.பி.1640–ல் புனித ஜார்ஜ் கோட்டை கட்டப்பட்டது.

இங்கிலாந்து அரசர் இரண்டாம் சார்லஸ், போர்ச்சுக்கல் நாட்டு இளவரசி காத்தரின் என்பவரை திருமணம் செய்ததால், சீர்வரிசையாக பம்பாய் கொடுக்கப்பட்டது. இதனை, இவர் ஆங்கிலக் கிழக்கிந்தியக் கம்பெனிக்கு வாடகைக்கு விட்டார்.

கி.பி.1699–ல் முகலாய மன்னர் ஔரங்கசீப்பின் அனுமதி பெற்று கல்கத்தாவில் வணிக மையம் நிறுவப்பட்டது.

இவ்வாறாக, ஆங்கிலேயர்கள் இந்தியாவின் முக்கிய பகுதிகளில் தங்களது வணிக மையங்களை ஏற்படுத்தினர்.

**டேனியர்கள்:–**

டென்மார்க் நாட்டைச் சேர்ந்தவர்கள் டேனியர்கள்.

டேனியர்கள், கி.பி.1620–ல் தரங்கம்பாடியிலும், கி.பி.1676–ல் வங்காளத்திலுள்ள சீராம்பூரிலும் வணிக மையங்களை நிறுவினர்.

பின்னர், இவற்றை ஆங்கிலேயருக்கு விற்றுவிட்டு

பர்ட் கிளைவ், கி.பி. 1765–ல் வங்காளத்தின் முதல் கவர்னரானார்.

இந்தியாவில் ஆங்கிலேய ஆட்சி அமைக்க அடிகோலினார். இரட்டை ஆட்சி முறையை அமல்படுத்தினார்.

**வாரன் ஹேஸ்டிங்ஸ்:–** இரட்டை ஆட்சி முறையினை ஒழித்தார். கி.பி.1773–ல் ஒழுங்குமுறைச் சட்டம் அமல்படுத்தப்பட்டது.

இதன்படி, வங்காளத்தின் ஆளுநர், வங்காள தலைமை ஆளுநராக நியமிக்கப்பட்டார். இதன்படி வாரன்ஹேஸ்டிங்ஸ் முதல் தலைமை ஆளுநர் ஆனார்.

கி.பி.1774–ல் ரோஹில்லா போர் நடந்தது. இப்போரில் ரோஹில்லர்களை (ஆப்கானிய மக்கள்) வாரன்ஹேஸ்டிங்ஸ் தோற்கடித்தார். இவரது காலத்தில் ஒவ்வொரு மாவட்டத்திலும் ஒரு ஆங்கில கலெக்டர் நியமிக்கப்பட்டார்.

நிலங்கள் குத்தகை அடிப்படையில், அதிக தொகைக்கு ஏலம் எடுப்பவர்களுக்கு 5 ஆண்டுகளுக்கு விடப்பட்டது. ஒவ்வொரு மாவட்டத்திலும் சிவில், கிரிமினல் நீதிமன்றங்கள் உருவாக்கப்பட்டன.

**காரன்வாலிஸ் பிரபு (கி.பி.1786–1793):–** வங்காளத்தில் நிலையான நிலவரித்திட்டத்தை (ஜமீன்தார் முறை) அமல்படுத்தினார். இதன்படி நிலங்கள் 10 ஆண்டுகளுக்கு ஜமீன்தார்களுக்கு சொந்தமாகும்.

சுதேசி சாம்ராஜ்யத்தில் தலையிடா கொள்கையினை அமல்படுத்தினார்.

நிலையான காவல் துறை உருவாக்கப்பட்டது. நீதிப்பணியிலிருந்து மாவட்ட ஆட்சியர் விடுவிக்கப்பட்டு வருவாய்த்துறை பொறுப்பு மட்டும் ஒப்படைக்கப்பட்டது.

காரன்வாலிஸ் சட்டத் தொகுப்பினை சர் ஜார்ஜ் பார்லோ என்பவர் தொகுத்து வெளியிட்டார்.

**சர் ஜான்ஷோர் பிரபு:–** தலையிடாக் கொள்கையினைப் பின்பற்றி ஆட்சி செய்தார்.

**வெல்லெஸ்லி பிரபு:–** துணைப்படைத் திட்டத்தைக் கொண்டு வந்தார். இதனால் பிரான்ஸ் நாட்டின் ஆதிக்கம் இந்தியாவிலிருந்து முற்றிலும் அகற்றப்பட்டது.

துணைப்படைத் திட்டத்தை ஏற்றுக்கொண்ட முதல் இந்திய மன்னர் ஹைதராபாத் நிஜாம். இவர் பெல்லாரி, கடப்பா, அனந்தபூர், கர்னூல் ஆகிய பகுதிகளை ஆங்கிலேயருக்கு கொடுத்தார்.

இத்திட்டத்தை ஏற்க மறுத்தவர் திப்பு சுல்தான்.

'இருப்பு பாதையின் தந்தை' என்றும் அழைக்கப்படுபவர்.

வாரிசு இழப்புக் கொள்கை மூலம் ஜான்சி, சதாரா, ஜெய்பூர், சம்பல்பூர், உதய்பூர், நாகபுரி ஆகியவற்றை ஆங்கில அரசுடன் இணைத்தார்.

கி.பி.1852–ல் நடந்த இரண்டாம் பர்மியப் போரில் பர்மியர்களை வென்று, பர்மா முழுவதையும் முழுக்கட்டுப்பாட்டில் கொண்டு வந்தார்.

**டல்ஹௌசியின் சீர்திருத்தங்கள்:–**

இந்தியாவில் முதன் முதலில் இருப்புப்பாதையை அறிமுகப்படுத்தினார்.

கி.பி.1853–ல் பம்பாய் முதல் தானாவிற்கும்,

கி.பி.1854–ல் ஹௌரா–ராணிகஞ்சுக்கு இடையிலும்,

கி.பி.1856–ல் சென்னை–அரக்கோணத்திற்கு இடையிலும் இருப்புப்பாதைகள் அமைக்கப்பட்டன.

நாடு முழுவதும் தபால் தந்தி அலுவலகங்கள் அமைக்கப்பட்டு, முதன்முதலாக அஞ்சல் வில்லைகள் அறிமுகப்படுத்தப்பட்டன. நாடு முழுவதும் தந்திக்கம்பிகள் மூலம் இணைக்கப்பட்டன.

கி.பி.1856–ல் விதவைகள் மறுமணச்சட்டம் கொண்டு வர காரணமாக விளங்கினார்.

பொதுப்பணித்துறையினை ஏற்படுத்தினார்.

பெஷாவர் மற்றும் கல்கத்தாவை இணைக்கும் பெருவழிச்சாலை புதுப்பிக்கப்பட்டது.

கங்கை கால்வாய் வெட்டப்பட்டது.

கி.பி.1854–ல் சர் சார்லஸ் உட்ஸ் என்பவர் தலைமையில் கல்விக்குழு அமைக்கப்பட்டு பல்வேறு மாற்றங்கள் கொண்டுவரப்பட்டன.

ஒவ்வொரு மாகாணத்திலும் கல்வித்துறை தனியாக ஏற்படுத்தப்பட்டது.

ஆசிரியர் பயிற்சி நிறுவனங்கள் நாடு முழுவதும் தோற்றுவிக்கப்பட்டன.

சென்னை, பம்பாய், கல்கத்தா பல்கலைக்கழகங்கள் நிறுவப்பட்டன.

ரூர்கி என்ற இடத்தில் பொறியியல் கல்லூரி தோற்றுவிக்கப்பட்டது.

அங்கீகரிக்கப்பட்ட பள்ளி மற்றும் கல்லூரிகளுக்கு நிதி வழங்கும் முறை அறிமுகப்படுத்தப் பட்டது.

இராணுவத்தின் தலைமையிடம் கல்கத்தாவிலிருந்து சிம்லாவுக்கு மாற்றப்பட்டது.

பீரங்கி படையின் தலைமையிடம் கல்கத்தாவிலிருந்து மீரட்டிற்கு மாற்றப்பட்டது.

**(அடுத்த வாரம் இந்திய சுதந்திரப்போராட்ட வரலாறு தொடரும்.)**

## முதல் இந்திய சுதந்திரப்போர் (1857)

- ஆங்கிலேய ஆட்சிக்கு எதிராக இந்தியர்கள் பெற்ற தொடர் துயரங்களின் வெளிப்பாடாக, கி.பி. 1857–ல் இந்திய இராணுவ வீரர்களிடையே ஏற்பட்ட புரட்சியே முதல் இந்திய சுதந்திரப்போர்.
- ஆங்கில வரலாற்று அறிஞர்கள் இதனை 'சிப்பாய் கலகம்' என்றழைக்கின்றனர்.
- இப்புரட்சி கானிங் பிரபு காலத்தில் ஏற்பட்டது.
- **புரட்சிக்கான அரசியல் காரணம்:** வெல்லெஸ்லியின் துணைப்படை திட்டம் மற்றும் டல்ஹௌசியின் நாடு இழக்கும் கொள்கை.
- **பொருளாதாரக் காரணம்:** தபால், தந்தி, இருப்புப்பாதை, மேலை நாட்டுக்கல்வி அறிமுகம்.
- **இராணுவக்காரணம்:** 1856–ல் கொண்டுவரப்பட்ட 'பொதுப்பணி படைச்சட்டம்' மற்றும் இராணுவ வீரர்கள் சமயக்குறிகள், தலைப்பாகை போன்றவற்றை அணிய தடை விதித்தது.
- **உடனடிக்காரணம்:** துப்பாக்கியில் பயன்படுத்த கொழுப்பு தடவிய தோட்டாக்களை பயன்படுத்த இந்து மற்றும் முஸ்லீம் வீரர்கள் மறுத்தது.
- **புரட்சி:** வங்காளத்தில் பாரக்பூரின் 34–வது காலாட்படைப் பிரிவைச் சேர்ந்த மங்கள் பாண்டே என்ற வீரர் கொழுப்பு தடவிய தோட்டாவை தொட எதிர்ப்பு தெரிவித்து ஆங்கில அதிகாரிகளைச் சுட்டுக் கொன்றதால், 8–4–1857 அன்று தூக்கிலிடப்பட்டார்.
- இதனைத் தொடர்ந்து 1857, மே 9–ல் புரட்சி தொடங்கி, மே 10–ல் வெளிப்படையாக வீரர்கள் புரட்சியில் ஈடுபட்டனர். டெல்லியை நோக்கி அணிவகுத்துச் சென்று, டெல்லியைக் கைப்பற்றி முகலாய மன்னர் இரண்டாம் பகதூர் ஷாவை மன்னராக பிரகடனப்படுத்தினர்.
- கான்பூரில், இப்புரட்சியை நடத்தியவர் பீஷ்வா இரண்டாம் பாஜிராவின் வளர்ப்பு மகன் நானாசாகிப்.
- லக்னோவில் இப்புரட்சியை நடத்தியவர் பேகம் ஹஸ்ரத் மகால்.
- மத்திய இந்தியாவில் நானா சாகிப்பின் படைத்தளபதியான தாந்தியாதோப்பும், ஜான்சி ராணி லட்சுமிபாயும் புரட்சியை நடத்தினர்.
- இந்தியர்களிடையே ஒற்றுமை, ஒருங்கிணைப்பு இல்லாததால் இப்புரட்சி வெற்றி பெறவில்லை. எனினும் இப்புரட்சி நமது விடுதலைக்கு வித்திட்டது.
- இப்புரட்சியின் விளைவாக, இந்தியாவில் ஆங்கில கிழக்கிந்தியக் கம்பெனி ஆட்சி முடிவுக்கு வந்தது. ஆட்சிப்பொறுப்பை இங்கிலாந்தின் அரசி ஏற்றுக்கொண்டார்.
- 1858, நவம்பர் 1–ல், விக்டோரியா மகாராணியின் பேரறிக்கை வெளியிடப்பட்டது. இந்தியத் தலைமை ஆளுநர் இந்திய அரசப் பிரதிநிதி (வைஸ்ராய்) என பெயர் மாற்றம் செய்யப்பட்டார்.
- அதன்படி, இந்தியாவின் கடைசி தலைமை ஆளுநர் கானிங்பிரபு, முதல் அரசப் பிரதிநிதியும் கானிங்பிரபு தான்.

### லிட்டன் பிரபு: (கி.பி.1876 – 1880)

- 1878–ல் இவர் காலத்தில் இரண்டாம் ஆப்கானியப்போர் நடந்தது.
- கி.பி.1876 முதல் 1878 வரை இந்தியாவில் மிகக்கடுமையான பஞ்சம் நிலவியது. இதனால் லட்சக்கணக்கான மக்கள் உயிரிழந்தனர்.
- வட்டார மொழிகள் பத்திரிக்கை சட்டம் (1878), இந்திய ஆயுதச் சட்டம் (1878) ஆகியவற்றை கொண்டுவந்தார்.

### ரிப்பன் பிரபு: (கி.பி. 1880–1884)

- இந்திய நிர்வாகத்தில் இந்திய மக்களும் பங்குபெற வேண்டுமென்ற தாராள மனப்பான்மை கொண்டவர் ரிப்பன் பிரபு.
- தொழிற்சாலைச் சட்டம் (1881), வட்டார மொழிகள் பத்திரிக்கை சட்டம் நீக்கப்படுதல் (1881) ஆகிய சட்டங்களை கொண்டுவந்தார்.
- இந்தியாவில் முறையான மக்கள் தொகை கணக்கெடுக்கும் முறையினை கி.பி.1881–ல் அறிமுகப்படுத்தினார்.
- கி.பி.1882–ல் W.W.ஹண்டர் என்பவர் மூலம் கல்விக்குழு அமைத்தார்.
- உள்ளாட்சி நிர்வாகத்தில் பல சீர்திருத்தங்களைக் கொண்டு வந்ததால் 'உள்ளாட்சி அரசின் தந்தை' எனப் போற்றப்பட்டார்.
- கி.பி.1883–ல் ஆங்கிலக் குற்றவாளிகளை இந்திய நீதிபதிகள் விசாரணை செய்யும் இல்பர்ட் மசோதாவைக் கொண்டு வந்தார் ரிப்பன் பிரபு

### இந்திய தேசிய காங்கிரசின் தோற்றம்

- கி.பி.1885–ல் இந்திய தேசிய காங்கிரஸ் அல்லது இந்திய தேசியப் பேராயக்கட்சி என்ற அமைப்பினை ஓய்வு பெற்ற ஆங்கில அதிகாரியான ஆலன் ஆக்டேவியன் ஹியூம் முறை கடுமையான பஞ்சம் ஏற்பட்டது.
- வங்காளத்தில் பூசா என்ற இடத்தில், அவர் விவசாய ஆராய்ச்சி நிறுவனத்தை ஏற்படுத்தினார்.
- நாடெங்கும் கூட்டுறவு சங்கங்கள் தொடங்கப்பட்டன.
- கி.பி.1904–ல் பழங்கால நினைவுச் சின்னங்கள் பாதுகாப்புச் சட்டத்தை இயற்றினார்.
- கி.பி.1905–ல் வங்கத்தை இரண்டாகப் பிரித்தார்.
- வங்கப்பிரிவினை சுதேசி இயக்கம் தோன்ற வழிவகுத்தது.

www.tnpsctricks.com

- கி.பி.1911–ல் வங்கம் மீண்டும் ஒன்றாக இணைந்தது.

### முஸ்லீம் லீக் தோற்றம்

- கி.பி.1906–ல் டாக்காவின் நவாபான சலிமுல்லா கான் தலைமையில் முஸ்லீம் லீக் உருவானது.

**சூரத் பிளவு: (கி.பி. 1907)**

- காங்கிரஸ் தலைவரைத் தேர்ந்தெடுப்பதில், மிதவாதிகளுக்கும் தீவிரவாதிகளுக்கும் கருத்து வேறுபாடு ஏற்பட்டது. காங்கிரஸ் இரண்டாகப் பிரிந்து தீவிரவாதிகள் வெளியேறினர். இது 'சூரத் பிளவு' எனப்படுகிறது.

**மிண்டோ – மார்லி சீர்திருத்தம் (கி.பி.1909)**

- சட்ட மன்றங்களில் தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர்களின் எண்ணிக்கை உயர்த்தப்பட்டது.
- முஸ்லீம்களுக்கு தனித்தொகுதிகள் அறிமுகப்படுத்தப்பட்டன.

### முதல் உலகப்போர்

- கி.பி.1914–1918 முதல் உலகப்போர் நடந்தது.
- இந்திய தலைவர்களின் விருப்பமின்றி, இந்திய வீரர்கள் இப்போரில் பங்கு பெற்றனர்.

**தன்னாட்சி கழகம்**

- கி.பி.1916–ல் திலகர் தன்னாட்சிக்கழகத்தை (Home Rule League) மும்பையில் தொடங்கினார். சென்னையில் அன்னிபெசன்ட் அம்மையார் தன்னாட்சிக் கழகத்தைத் தொடங்கினார்.
- கி.பி.1917–ல் வெளியிடப்பட்ட மாண்டேகு பிரபுவின் ஆகஸ்ட் அறிக்கையில் இந்தியர்களுக்கு படிப்படியாக பொறுப்பாட்சி வழங்கப்படும் என உறுதி அளிக்கப்பட்டதால், தன்னாட்சி கழகம் முக்கியத்துவத்தை இழந்தது.

**மாண்டேகு–செம்ஸ்போர்டு சீர்திருத்தச் சட்டம் – (1919)**

- மாகாணங்களில் இரட்டை ஆட்சிமுறையினை இச்சட்டம் அறிமுகப்படுத்தியது.
- கிறிஸ்தவர்கள், ஆங்கிலோ இந்தியர்கள், சீக்கியர்கள் ஆகியோருக்கு தனித்தனி தொகுதிகள் வழங்கப்பட்டன.

**ரௌலட் சட்டம் (1919)**

- இச்சட்டம் எவரையும் விசாரணையின்றி, சிறையில் அடைக்கும் அதிகாரத்தை ஆங்கில அரசுக்கு வழங்கியது. இதன் விளைவாக நாடு முழுவதும் எதிர்ப்பு போராட்டங்களும், கடையடைப்பும் நடந்தன.

**ஜாலியன் வாலாபாக் படுகொலை (13 ஏப்ரல் 1919)**

- ரௌலட் சட்டத்தினை எதிர்த்துப் போராடிய, பஞ்சாபில் கைது செய்யப்பட்ட காங்கிஸ் தலைவர்களை விடுதலை செய்யக்கோரி, பஞ்சாப் அமிர்தசரஸில் உள்ள ஜாலியன் வாலாபாக் என்னுமிடத்தில் கூடிய பொதுமக்களை எவ்வித முன்னறிவிப்புமின்றி அமிர்தசரஸின் இராணுவத் தளபதி ஜெனரல் டயர் சுடுவதற்கு உத்தரவிட்டார். இத்துப்பாக்கி சூட்டில் ஏறக்குறைய 500 பேர்களுக்கு மேல் உயிரிழந்தனர். 1200 பேர்களுக்கு மேல் காயமடைந்தனர். இது 'பஞ்சாப் படுகொலை' என்றும் அழைக்கப்படுகிறது.
- காந்திஜி இச்சம்பவத்தைக் கண்டித்து ஆங்கில அரசுடன் ஒத்துழைக்க மறுத்தார். கி.பி.1920–ல் ஒத்துழையாமை இயக்கத்தை தொடங்கினார்.
- ஒத்துழையாமை இயக்கத்தின் மூலம் காந்திஜி இந்தியாவின் சிறப்பு மிக்க தலைவராகத் தோன்றினார்.

### காந்தி சகாப்தம்

- காந்தி பிறந்தது: 1869–ம் ஆண்டு அக்டோபர் 2, குஜராத் போர்பந்தரில்.
- பெற்றோர்: கரம்சந்த் காந்தி – புத்திலிபாய்
- இளம் வயதில் அரிச்சந்திரா நாடகம் – வாய்மை, நேர்மையினை அவருள் ஏற்படுத்தியது.
- தனது 13 வது வயதில் கஸ்தூரிபாயை திருமணம் செய்து கொண்டார்.
- கல்லூரி படிப்பு – மும்பையில் உள்ள சாமலதாஸ் கல்லூரியில் பயின்றார்.
- லண்டன் சென்று பட்டப்படிப்பு முடித்து மும்பை திரும்பினார். மும்பையில் வக்கீல் தொழிலினை ஆரம்பித்தார்.
- ஒரு வழக்கு தொடர்பாக தாதா அப்துல்லா சேட் என்பவர் மூலம் தென்னாப்பிரிக்கா சென்றார். அங்கே நிறவெறிக் கொடுமையைக் கண்டார்.
- தென்னாப்பிரிக்காவில் டர்பன் – பிரிட்டோரியா செல்லும் ரெயிலில் முதல் வகுப்பில் பயணிச்சுக்காக டிக்கட்

- கி.பி.1883–ல் ஆங்கிலக் குற்றவாளிகளை இந்திய நீதிபதிகள் விசாரணை செய்யும் இல்பர்ட் மசோதாவைக் கொண்டு வந்தார் ரிப்பன் பிரபு

**இந்திய தேசிய காங்கிரசின் தோற்றம்**

- கி.பி.1885–ல் இந்திய தேசிய காங்கிரஸ் அல்லது இந்திய தேசியப் பேராயக்கட்சி என்ற அமைப்பினை ஒய்வு பெற்ற ஆங்கில அதிகாரியான ஆலம் ஆக்டேவியன் ஹியூம் தோற்றுவித்தார்.
- கட்சியின் முதல் மாநாடு மும்பையில், W.C. பானர்ஜி தலைமையில் நடந்தது.
- இம்முதல் மாநாட்டில், இந்தியாவின் பல்வேறு பகுதிகளில் இருந்து 72 இந்தியர்கள் கூடினர். இதில் சென்னை மாநிலத்திலிருந்து பங்கேற்றவர்கள் 21 பேர் ஆவர். இம்மாநாட்டின் முதல் தீர்மானத்தை தமிழரான சுப்பிரமணிய ஐயர் முன்மொழிந்தார்.
- இரண்டாம் காங்கிரஸ் மாநாடு கொல்கத்தாவிலும், மூன்றாம் மாநாடு சென்னையிலும் நடைபெற்றன.
- பின்னர் காங்கிரஸ் இரு பிரிவுகளாக இயங்கியது.
- கி.பி. 1885 முதல் 1905 வரை மிதவாதிகள் காலம்.
- கி.பி.1906 முதல் 1919 வரை உள்ள காலம் தீவிரவாதிகள் காலம். தீவிரவாத தேசிய இயக்கமானது தீவிரவாதிகள், பயங்கரவாதிகள் என இரு முகாம்களை உருவாக்கியது.

**மிதவாதிகள்:–**

சுரேந்திரநாத் பானர்ஜி, தாதாபாய் நவரோஜி, பெரோஷா மேத்தா, கோபாலகிருஷ்ண கோகலே, எம்.ஜி.ரானடே

**தீவிரவாதிகள்:–**

திலகர், லாலா லஜபதிராய், பிபின்சந்திரபால், அரவிந்த கோஷ், சுப்பிரமணிய சிவா, வ.உ.சி, பாரதியார்.

**பயங்கரவாதிகள் (அ) தேசியப்புரட்சியாளர்கள்:–**

கணேஷ் சாவர்க்கார், லாலா ஹர்தயாள், பகத்சிங், சந்திரசேகர் ஆசாத், வாஞ்சிநாதன், வ.வே.சு.ஐயர், நீலகண்ட பிரம்மச்சாரி

**கர்சன் பிரபு (கி.பி. 1899– 1905)**

- கர்சன் பிரபு காலத்தில் வட இந்தியாவில் இரண்டாவது

ரயில் பயின்றார்.

- லண்டன் சென்று பட்டப்படிப்பு முடித்து மும்பை திரும்பினார். மும்பையில் வக்கீல் தொழிலினை ஆரம்பித்தார்.
- ஒரு வழக்கு தொடர்பாக தாதா அப்துல்லா சேட் என்பவர் மூலம் தென்னாப்பிரிக்கா சென்றார். அங்கே நிறவெறிக் கொடுமையைக் கண்டார்.
- தென்னாப்பிரிக்காவில் டர்பன் – பிரிட்டோரியா செல்லும் இரயிலில் முதல் வகுப்பில் பயணித்தற்காக பீட்டர் மாரிட்ஸ்பர்க் என்ற இடத்தில் இரயிலிருந்து கீழே தள்ளி விடப்பட்டார். (தற்போது அவ்விடத்தில் காந்தியின் சிலை உள்ளது)
- கைரேகை பதித்த அடையாள அட்டையினை எங்கு சென்றாலும் கொண்டு செல்ல வேண்டும் என்பதை ஆட்சேபித்து, தென்னாப்பிரிக்கா – ஜோகன்ஸ்பர்க் எம்பயர் திரையரங்கத்தில் நடைபெற்ற கூட்டத்தில் பங்கேற்று சிறப்புரையாற்றினார்.
- தென்னாப்பிரிக்கா போராட்டத்தில் காந்தியுடன் போராடி சிறை சென்றவர் தமிழக பெண்மணி தில்லையாடி வள்ளியம்மை. சிறையில் நோய்வாய்ப்பட்டு 16 வயதில் உயிரிழந்தார் வள்ளியம்மை.
- தென் ஆப்பிரிக்காவில் இருந்து 1915 ஜனவரியில் காந்தி மும்பை திரும்பினார்.
- 1916–ல் குஜராத்தில் சபர்மதி ஆசிரமம் அமைத்தார்.
- காந்தியின் முதல் போராட்டம் 1917–ல் இந்தியாவில் பீகாரில் உள்ள சம்பரான் என்னுமிடத்தில் அவுரிப்பயிர் செய்த விவசாயிகளுக்கு ஆதரவாக நடந்தது.
- 1918–ல் அகமதாபாத் ஆலைத்தொழிலாளர் போராட்டத்தில் பங்கேற்றார்.
- 1917–18–ல் குஜராத் – கேதார் மாவட்டத்தில் 'வரி கொடா' இயக்கத்தில் பங்கேற்றார்.
- 1919–ல் இயற்றப்பட்ட ரௌலட் சட்டத்தை எதிர்க்குமாறு காந்தி அழைப்பு விடுத்தார்.
- 1919–ல் நடந்த ஜாலியன் வாலாபாக் படுகொலையினைக் கண்டித்து, 1920–ல் ஒத்துழையாமை இயக்கத்தினை காந்தி தொடங்கினார்.
- 1921–ல் அகமதாபாத் காங்கிரஸ் மாநாட்டில் மக்கள் வரி

செலுத்த வேண்டாம் என்று கேட்டுக்கொண்டார்.

- 1921-ம் ஆண்டு இறுதியில் பர்தோலியில் – படேலுடன் வரிகொடா இயக்கத்தில் பங்கேற்றார்.
- 1922-ம் ஆண்டு உத்திரப்பிரதேசத்தில் உள்ள சௌரி சௌராவில் காவல் நிலையம் தீ வைப்பு – 22 காவலர்கள் இறப்பு – இதை அறிந்த காந்தி ஒத்துழையாமை இயக்கத்தை நிறுத்தினார்.
- 1923–25–ல் சுயராஜ்ய கட்சியை, மோதிலால் நேரு – சி.ஆர்.தாஸ் தோற்றுவித்தார்கள். 1925–ல் சி.ஆர்.தாஸ் மரணம்.
- 1929–ல் லாகூர் காங்கிரஸ் மாநாடு – மூன்று தீர்மானம். 1) பூரண சுதந்திரம், 2) சட்ட மறுப்பு இயக்கம், 3) ஜனவரி 26–ந் தேதியை சுதந்திர தினமாக ஒவ்வொரு ஆண்டும் கொண்டாடுவது.
- அதன்படி, காந்திஜி உப்பு சத்தியாகிரகத்தை (சட்ட மறுப்பு இயக்கம்) சபர்மதியிலிருந்து – சரோஜினி தேவி உள்ளிட்ட 78 நபர்களுடன், 1930 மார்ச்–12ல் தொடங்கி, ஏப்ரல் 6–ல் தண்டி அடைந்தார் (400 கி.மீ. பயணம்). தண்டியில் உப்பு காய்ச்சி சட்டத்தை மீறினார். அனைவரும் கைது செய்யப் பட்டனர்.

www.tnpsctricks.com

**வட்டமேஜை மாநாடு**

- ஆங்கிலேய அரசு, சட்ட மறுப்பு இயக்கத்தினை அடக்க முடியவில்லை. இதனால் கோபமடைந்திருந்த இந்தி யர்களை சமாதானப்படுத்தும் வகையில், வட்டமேஜை மாநாட்டினை கி.பி.1930 ஏற்பாடு செய்தது. காங்கிரஸ் தலைவர்கள் அனைவரும் சிறையில் இருந்ததால் யாரும் கலந்து கொள்ளவில்லை.
- கி.பி.1931–ல் காந்தி விடுதலை செய்யப்பட்டார். காந்தி – இர்வின் ஒப்பந்தம் ஏற்பட்டது. காந்தி சட்ட மறுப்பு இயக்கத் தினை கைவிட ஒப்புக்கொண்டார். அனைவரையும் விடு தலை செய்தால் இரண்டாவது வட்டமேஜை மாநாட்டில் கலந்து கொள்ளவும் இசைவு தெரிவித்தார்.
- அதன்படி கி.பி.1931–ல் இரண்டாம் வட்டமேஜை மாநாட் டில் கலந்து கொண்டார். மாநாட்டில் எம்முடிவும் எட்டப் பெறவில்லை. ஆங்கில அரசு காங்கிரஸை சட்ட விரோ தமானது என அறிவித்து, காந்தி மற்றும் முக்கிய தலை வர்களை சிறையில் அடைத்தது.

**பூனா உடன்படிக்கை:–**

- கி.பி.1932–ல் வகுப்புவாரி பிரதிநிதித்துவ திட்டத்தை ஆங்கிலேய பிரபு ராம்சே மெக்டொனால்டு அறிவித்தார். டாக்டர் அம்பேத்கார் இதனை வரவேற்றார். காந்திஜி இத்திட்டத்தை நிராகரித்து சாகும்வரை உண்ணாவிரதம் இருந்தார்.
- கி.பி.1932–ல் காந்திக்கும் அம்பேத்காருக்கும் ஏற்பட்டதே பூனா உடன்படிக்கை, இதன்படி, சட்டசபைகளில் ஒடுக்கப் பட்ட பின்தங்கிய மக்களுக்கு அதிக இடங்கள் வழங்க ஒப்புக்கொள்ளப்பட்டது.

**இந்திய அரசு சட்டம் (1935):–**

- கி.பி.1935ல் இந்திய அரசு சட்டம் இயற்றப்பட்டது. இதன் படி...
  (1) மாகாணங்களில் இரட்டை ஆட்சி முறை நீக்கப் பட்டது.
  (2) மத்திய மாகாண சிக்கல்களைத் தீர்க்க கூட்டாட்சி நீதிமன்றம் உருவானது.
  (3) கூட்டாட்சி ரிசர்வ் வங்கி (Federal Reserve Bank) நிறுவப்பட்டது.
- இரண்டாம் உலகப்போர் கி.பி.1939 முதல் 1945 வரை நடந்தது.
- ஜின்னாவின் இரு நாடுகள் கொள்கை (கி.பி.1940):
- முகமது அலி ஜின்னா, முஸ்லீம்களுக்கு பாகிஸ்தான் என்ற தனி நாடு கோரினார்.

**சுபாஷ் சந்திரபோஸ்:**

- சுபாஷ் சந்திரபோஸ் கி.பி.1927–ல் காங்கிரஸில் சேர்ந்தார்.
- 1938–ல் காங்கிரஸின் தலைவராகத் தேர்தெடுக்கப்பட் டார்.
- 1939–ல் முற்போக்கு கட்சியைத் (Forward Bloc) தொடங்கினார்.
- 1942–ல் இந்திய தேசிய இராணுவத்தினை உருவாக் கினார்.
- ஜெய்ஹிந்த் என்பதும் 'டெல்லியை நோக்கிச் செல்' (டெல்லி சலோ) என்பதும் இவரது புகழ்மிக்க முழக்கங்க ளாகும்.
- கி.பி.1940–ல் லின்லித்கோ பிரபு ஆகஸ்ட் நன்கொடை என்பதை அறிவித்தார். இதன்படி, இந்தியாவுக்கு டொமினியன் அந்தஸ்து வழங்கப்படும் என்றார்.
- கி.பி.1942–ல் கிரிப்ஸ் தூதுக்குழு வருகை– சுதந்திரம் வழங்குவது பற்றி கூறாததால் இந்தியர்களுக்கு ஏமாற்றம்.
- இதனால் வெகுண்டெழுந்த காந்தி 'வெள்ளையனே வெளியேறு' இயக்கத்தை 1942ல் ஆகஸ்ட் 8–ம் நாள்

- கி.பி.1940–ல் லின்லித்கோ பிரபு ஆகஸ்ட் நன்கொடை என்பதை அறிவித்தார். இதன்படி, இந்தியாவுக்கு டொமினியன் அந்தஸ்து வழங்கப்படும் என்றார்.
- கி.பி.1942–ல் கிரிப்ஸ் தூதுக்குழு வருகை– சுதந்திரம் வழங்குவது பற்றி கூறாததால் இந்தியர்களுக்கு ஏமாற்றம்.
- இதனால் வெகுண்டெழுந்த காந்தி 'வெள்ளையனே வெளியேறு' இயக்கத்தை 1942ல் ஆகஸ்ட் 8–ம் நாள் மும்பை மாநாட்டில் அறிவித்தார்.
- கி.பி.1945–ல் இங்கிலாந்தில் நடந்த தேர்தலில் வெற்றி பெற்ற தொழிலாளர் கட்சியைச் சேர்ந்த அட்லி பிரபு, பிரதமராக பதவி ஏற்றார்.
- கி.பி.1946–ல் அமைச்சரவை தூதுக்குழு இந்தியா வந்தது. இந்தியாவுக்கு சுதந்திரம் வழங்க பரிந்துரை செய்தது.
- கி.பி.1946–ல் நேரு தலைமையில் இடைக்கால அரசு பதவியேற்றது. இடைக்கால அரசில் முதலில் பங்கெடுக்க மறுத்த முஸ்லீம் லீக், வேவல் பிரபுவின் தலையீட்டின் பேரில் பின்னர் பங்கெடுத்தது.
- கி.பி.1947–ல் மவுன்ட்பேட்டன் திட்டத்தினை காங்கிரசும், முஸ்லீம்லீக்கும் ஏற்றுக் கொண்டன. அதன்படி இங்கிலாந்தில் ஜூலை 1947–ல் இந்திய விடுதலைச் சட்டம் இயற்றப்பட்டது.
- அதன்படி, இந்தியா 1947 ஆகஸ்ட் 15–ல் சுதந்திரம் அடைந்தது.
- இந்தியா சுதந்திரமடையும் போது ஏறத்தாழ 565 சுதேச அரசுகள் இருந்தன. இதில் 562 அரசுகள் இந்திய யூனியனுடன் இணைந்தன. இவற்றை இணைத்த பெருமை சர்தார் வல்லபாய் படேலைச் சாரும்.
- கி.பி.1948–ல் காஷ்மீரும், ஐதராபாத்தும் (சுதேச அரசுகளில் பெரியது) கி.பி.1949 ஜீனாகத் என்ற சுதேச அரசும் இந்தியாவுடன் இணைந்தன.
- பிரெஞ்சுப் பகுதிகளான பாண்டிச்சேரி, காரைக்கால், மாஹி, ஏனாம், சந்திரநாகூர் ஆகியவை 1954–ல் இந்தியாவுடன் இணைந்தன.
- போர்த்துக்கீசிய பகுதிகளான கோவா, டையூ, டாமன் பகுதிகள் 1961–ல் இந்தியாவுடன் இணைந்தன.

www.tnpsctricks.com

(வரலாறு தொடரும்)